# திராவிடநாடு

27—7—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## சிரிப்பதா, அழுவதா?

( கா. வேழவேந்தன் )

செந்தமிழ்த் தோழிஇங்கே தெரியுமா சேதிஒன்று!
முந்தாநாள் அமைச்சர்சொன்ன மொழியினைக் கேட்டேன்தோழி!
சாதியை ஒழித்துக்கட்ட தருவீர்கள் ஒத்துழைப்பை
நீதியைச் சமுதாயத்தில் நிலைநாட்ட வாரீர் என்றார்!
சொல்கிறேன் வெட்கம்வந்து துளைத்தது கேட்டபோதில்!
பல்லெல்லாம் தெரியஅங்கே பளிச்சென்று சிரித்துவிட்டேன்!
செட்டியார் தேர்விலிங்கே சேனியர் தெருவிலெல்லாம்
கொட்டையாய்ச் சாதிப்பேர்கள் கொடுங்காட்சி தந்தால்உள்ளே
சட்டத்தின் துணையைக்கொண்டு தகுமுறை செய்திடாமல்
வெட்டிக்குப் பேசுவானேன்? வெறும்பேச்சுத் தானேதோழி?
நாடார்கள் அதிகமானால் நாடாரில் ஒருவர்தன்னை
தேடியே நிற்கவைத்து தேர்தலில் வென்றபின்பு
சாதியா? இருக்கலாமா? சாடுவோம் வாரீர்என்றால்
நீதிக்கு இடந்தான்எங்கே? நேர்மைதான் எங்கே.தோழி?
இருக்கின்ற நிலையமெல்லாம் இருக்கலாம் சாதிப்பேரில்,
இருக்கின்ற இதழ்கள்கூட இருக்கலாம் சாதிப்பேரில்,
தனிப்பட்ட சாதியொன்று தனக்குள்ளே மாநாடொன்றைத்
தனிப்பட நடத்தஇங்கே தடையில்லை என்றும்கூறி
இருப்பதா சமுதாயத்தில் இத்தனைசாதி என்றால்
சிரிப்பதா, அழுவதாநாம்? தெரியத்தான் இல்லையே,தோழி!

அந்தமான்!—ஒரு காலத்தில் கடுந்தண்டனை பெற்றவர்களை அனுப்பும் இடமாக இருந்தது. இப்போது, அது ஒரு அழகுத் தீவாக ஆகிவருகிறது.

அந்தமான், நிகோபார் தீவுகளில் வசிப்போருக்காக இந்தியா ஆண்டுக்கு ஆள் ஒருவருக்கு ரூ. 2000 வீதம் செலவிட்டு வருகிறது. 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 31,000 ஆகும். அங்கு 1956ல் போடப்பட்ட ஐந்தாண்டுத் திட்டப்படி, 6-கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்தீவுகளில் கிடைத்த வருமானம் 2⅓ கோடி ரூபாய்தான். ஆனால் அந்த இரண்டு ஆண்டுகளில் அதைப்போல இரண்டு மடங்கு தொகை 4·37 கோடி செலவிடப்பட்டிருக்கிறது.


இத்தீவுகளில் விவசாய குடும்பங்களை குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் இதுவரை 1629 குடும்பங்கள் குடியேறியுள்ளன. ஐந்து ஏக்கர் நிலமும், மானியமாக ரூ. 1050ம் கடனாக 1730 ரூபாயும் தரப்படுகிறது. கடனை மட்டும், ஒவ்வொரு குடும்பமும் திருப்பித் தரவேண்டும்.

நான்கு ஆரம்பப் பள்ளிகள்— இரு ஆதாரப்பள்ளிகள் — 20 படுக்கை வசதிகொண்ட ஆஸ்பத்திரி எல்லாம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பு திட்டத்தின் கீழ் "இண்டாஸ்" எனும் ஆஸ்பத்திரிக் கப்பல், நிகோபார் தொகுதித் தீவுகளில் வசித்து வருபவர்களுக்குச் சேவை செய்து வருகிறது.

*

ஒரு தங்கக் கைக் கடிகாரமும் ஒரு தங்க மோதிரமும் ஒரே ராத்திரியில் ஒரு மாங்கொட்டையாக மாறும் அதிசய வித்தையை இரு ஜாலவித்தைக்காரர்கள் செய்து காட்டினார்கள் பம்பாயில். இந்தக் கைக் கடிகாரமும் மோதிரமும் ஒரு டாக்டருடையவை.

இவ்விரு ஜாலவித்தைக்காரர்களையும் குருவையும்



அவரது பரமானந்த சீடரையும் பம்பாய் போலீசார் தேடி வருகின்றனர்.

குருவின் அமானுஷ்யமான சக்தியில் மேற்படி டாக்டருக்கு சீடர் நம்பிக்கை ஏற்படச் செய்து இவ்விரு ஜாலவித்தைக்காரர்களும் சிறிது ரொக்கம் உள்பட டாக்டரின் மேற்சொல்லப் பட்ட பொருள்களைத் தட்டிக்கொண்டு போய் விட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்விரு பொருள்களையும் படுக்கையின்கீழ் வைத்திருக்கும்படி டாக்டரிடம் இவர்கள் சொன்னதாகவும், மறுதினம் டாக்டர் துணியைப் பிரித்து பார்த்தபொழுது அதனுள் ஒரு மாங்கொட்டை இருந்ததைக் கண்டதாகவும் கூறப்படுகிறது.

*

வருடம் 10000 டாலர் சுமார் 50,000 ரூபாய் சேர்க்கலாம். பசிபிக் தீவு ஒன்றில் வேலை செய்து, ஆடம்பர வாழ்க்கை நடத்துவதினால் இதைச் சாதிக்கலாம் என லாஸ் ஆஞ்ஜலஸ் என்ஜினீயரிங் கார்ப்பரேஷன் ஒன்று தெரிவிக்கிறது.

இத் தீவில் இலவசமாக சினிமா காட்டப்படுமாம். உணவும் இலவசம்; அமெரிக்காவில் கிடைக்கும் உணவைக் காட்டிலும் அங்கு நல்ல உணவு கிடைக்குமாம். இத்தீவில் ஒரே ஒரு பெரிய குறை இருக்கிறது. பெண்கள் கிடையாது. அமெரிக்காவிற்கு அருகிலுள்ள இத்தீவின் பெயர் 'பாரி ஐலண்ட்' அணு சோதனைகள் நடத்தப்படும் எனவிடாக் கோஷ்டித் தீவுகளில் இதுவும் ஒன்று! அணு சோதனைகளைமேற்கொள்வதற்கான தளத்தை நிர்மாணிக்கவும், பின்னர் அதை நிர்மூலமாக்குவதிலும் ஈடுபட்டு உள்ள ஒரு என்ஜினீயரிங் கம்பெனிதான இந்த அறிவிப்பை வெளியிட்டு உள்ளது. 1949-ம் ஆண்டு முதல் இததீவில் மனிதர்கள் வேலை செய்து வருகின்றனர். சாதாரணமாக அங்கு 500 பேர் வசிப்பர். அணு சோதனையின்போது சுமார் 3200 பேர்களுக்கு மேல் இருப்பர். சிலர் 7 ஆண்டு காலமாக அத்தீவில் வசித்து வருகின்றனர்.

2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அணு சோதனை மேற்கொள்ளப்படும். சோதனை தளத்தை நிர்மாணிக்க சுமார் ஒரு ஆண்டு பிடிக்குமாம். அதைப் பின்னர் நிர்மூலமாக்க 6-மாதம் தேவைப்படுமாம்.

*

நியூஜிலந்து தேசத்தில் பெண்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு உள்ளது! வெளி நாடுகளில் இருந்து 20,000 பெண்களை அந்நாடு சிலாகிக்கும்.

திருமண வயது வந்த ஆண்கள் இருவர் இருந்தால், பெண் ஒருத்திதான் இருக்கிறாள்!

இந்நாட்டுக்கு வர விரும்பும் பெண்களுக்கு வழிச் செலவு கொடுக்கவும் சர்க்கார் தயாராக இருக்கிறது. ஏதாவது தொழில் தெரிந்திருந்தால் போதும்.

ஏராளமான பிரிட்டிஷ் பெண்கள் இங்கு வரத் தயாராக இருப்பார்கள். அவர்கள் வராவிட்டால் ஐரோப்பாவிலிருந்து பெண்களை 'இறக்குமதி' செய்வது பற்றி நியூஜிலந்து யோசிக்குமாம்.

*

மூன்று 'குடும்பப் பெண்கள்' குழு ஒன்று இமயமலை ஏற முற்பட்டுவிட்டது! இமயமலைத் தொடரிலுள்ள 'சாம்பா' என்ற மலைக்கு சென்றுள்ளனர்.

லண்டனில வாழும் இப் பெண்மணிகள் மோட்டார் வண்டி மூலம லண்டனிலிருந்து புது டில்லிக்கு ஆறு வாரத்தில் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் பனிமனிதனைக் காண ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர்! ✱

# ★ மேகம் ★

லர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [27—7—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 2


குருசேவ் கடிதம் எழுதுகிறார் — ஐசனோவர் அறிக்கை விடுக்கிறார்—நேரு, இருபக்கமும் பார்க்கிறார் — உலகமோ, கலங்குகிறது! துருப்புகளோ, மத்ய தரைக் கடலின் பகுதியிலே உள்ள நாடுகளில் எப்போது பாய்வதென வலம் வருகின்றன!.

ஏதாவது ஒரு 'அதிர்ச்சி'யை உண்டுபண்ணி, அதன்மூலம், இலாபம் அடையப்பார்ப்பது, நாகரிகம் பெற்ற மனிதனின் குணமாகி வருகிறது. 'பொருள் கிடைக்கவில்லை' எனச் சொல்லி, கிராக்கியை உண்டு பண்ணி, விற்க முயலுகிறார் கொள்ளைலாபம் விரும்பி; 'என்ன நேருமோ!' என்கிற பயத்தை உண்டுபண்ணி, மக்களை மடக்க நினைக்கிறார், ஆதிக்க ஆசைக்காரர். இப்படிப்பட்ட இலாபவேட்டைக்காரர்களை வளர்க்கும் முதலாளித்துவ முகாம், அடிக்கடி ஏதாவது ஒரு பேரதிர்ச்சியை உலகுக்கு அளித்துக்கொண்டே இருக்கிறது. விளைவு, உலக மக்கள் நடுங்குவது மட்டுமல்ல, சாதாரணமானவர்கள் எல்லாம் தலையில் கைவைத்து ஏங்க நேருகிறது! லெபனானில் அமெரிக்கத் துருப்புகள் இறங்குகின்றன என்றதும், கல்கத்தா சர்க்கார் அவசரக்கூட்டம் போட்டிருக்கிறது, 'யாராவது, சாமான்களின் விலையை உயர்த்தப்பார்த்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுவார்கள்', என்று!!

விஞ்ஞானம் வளர வளர, உலகம் மிகமிகச் சிறியதாகி விட்டது. உலகத்தை ஒழித்துக்கட்டும் குண்டுகள் தயாரிப்பதுகூட சாதாரணமாகிவிட்டது. ஒலிபெருக்கியையும், வான ஊர்தியையும், காற்றின் வேகத்தையும், ஒளி ஊடுருவிப்பாயும் சக்தியையும் கணக்கிட்டான் விஞ்ஞானி! அந்தக் கண்டுபிடிப்பின் மூலம், என்னென்ன குண்டுகளை வீசலாம், எந்தெந்தக் கிருமிகளை எங்கெங்கே அனுப்பலாம் என்று ஆதிக்கக்காரர்கள் வளர்த்துக்கொண்டேயிருக்கிறார்கள்!!

ஒரு வாரமாக, உலகை "போர் மேகம்" சூழ்ந்து கொண்டுள்ளது. கடந்த போர், நேரடியாகத் தாக்காவிடினும், அதனால் பட்டபாட்டினை இன்னும் மறக்க முடியவில்லை நம்மால்! குழந்தைகளுக்குத் தேவையான புட்டிப்பாலிலிருந்து இங்கேயே விளையும் பொருள்கள்வரை, விலையேறிக் கிடக்கும் இச்சமயத்தில், ஆதிக்கக்காரர்களின் "கெடுபிடிப் போரால்", வாழ்க்கைச் சுமை எவ்வளவு அதிகரிக்குமோ— என்னென்ன நேருமோ, என்கிற அதிர்ச்சி இங்குள்ள ஒவ்வொருவரையும் தாக்க ஆரம்பித்து விட்டது.

அன்பு நெறியை வளர்த்தார் இயேசு. அவருடைய மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மேற்கு வல்லரசுகளுக்கு, ஏனோ இப்படி ஒரு மனோபாவம்? எங்காவது, ஏதாவது என்றால், உடனே வரிந்துகட்டிக்கொண்டு கிளம்பி விடுகிறது, அமெரிக்கா. உடனே, ருசியா, எதிர்ச் சவால்விட்டுக்கொண்டு, கிளம்பவேண்டியதாகிவிடுகிறது. "என்ன இருந்தாலும், ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்னையில் தலையிடுவது தவறு" என்று ருசியா கண்டிக்க, "நீமட்டும் அங்கேரியில் செய்தது என்னவாம்? உன்படைகளை நுழையவிடவில்லையோ" என்று அமெரிக்கா கேட்க, இப்படி ஒருவருக்கொருவர், போட்டிபோட்டுக்கொண்டு, 'சதுரங்கம்' ஆடுகின்றனர். சாதாரண மக்களோ, தத்தளிக்கின்றனர்! தவிக்கின்றனர்!!

உலகத்தில், விடுதலைத் தாகம், அதிகரித்து வரும் யுகம் இது. ஏழை, உரிமைக் குரல் எழுப்புகிறான்! அடிமை, கிளர்ந்தெழுகிறான்! அவதிப்பட்டவன் வாழத் துடிக்கிறான்! இதன காரணமாக, மணிமுடிகள் உருளுகின்றன; மதோன்மத்தர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள்; ஆதிக்கம் செலுத்தவிரும்பும் அந்நிய ஆட்சிகள் அகற்றப்படுகின்றன. இந்தத் தாகம் இயற்கையாக ஏற்படக் கூடியது! இதனை, யாரே தடுக்க முடியும்? அமெரிக்கா, படையாலும் பயமுறுத்தலாலும் முடியும் எனக் கருதுகிறது போலும்! மிகமிகத் தப்புக்கணக்கு!!

"எண்ணங்கள் மோதிக் கொள்ள வேண்டுமே தவிர; உடல்கள் தாக்கிக் கொள்ளுதல் கூடாது", என்பதைத்தான், விஞ்ஞான யுகத்தில் வாழ்வோர் உணரவேண்டும். ஏனோ தெரியவில்லை, உலகில், அன்புக்கு இடம்தேடப்படாமல் இதுபோன்ற ஆர்ப்பரிப்புகளுக்கு வாய்ப்புகள் உண்டாக்கப்படுகின்றன! இயேசு—முகமது—புத்தர் போன்ற சீலர்கள், அன்பைத்தான் போதித்தனர். அதன் வழிநின்று காந்தியடிகளும், அகிம்சை, அகிம்சை' என்றார். அகிம்சையைப் பேசிக்கொண்டே, நேரு அவர்கள், நாகர்கள்மீது குண்டுகள் போடுகிறார்! இவரே இப்படிச் செய்யும்போது, ஏனையவர்களைப்பற்றி என்ன சொல்வது! சுண்டு விரலே துள்ளும் போது, கைக்குச் சொல்லவா வேண்டும்.

ஒன்று மட்டும் சொல்வோம்—"மனிதன்" என்கிற உருவத்துக்கும், அந்த மனிதன் சாவதற்கு வாழ வேண்டியிருக்கிற நாட்களுக்கும், மதிப்பு அளிக்கிற மனோபாவம், இங்குமட்டுமல்ல; உலகெங்கும் மலரவேண்டும். அப்போது, பேதாபேதங்கள் மட்டுமல்ல, ஆதிக்க ஆசை, சுரண்டல் புத்தி, சூதுக் குணம் யாவும் ஒழியும்; சுகமும், உலக சகோதரத்துவமும் மலரும். அந்நாள், வருமா! ஏக்கத்துடன், உலகைப் பார்க்கிறோம்!!

✻

# வாழ்வில்லையாம்; வக்கீலாகிறார்!!

["வண்டு"]

"ஏனடா, தம்பி! இப்படியெல்லாம் ஓடியாடிச் சம்பாதிக்கிறாய். ஆனால், உன் மனைவியின் கழுத்திலோ, காதிலோ ஒருமணி கூட இல்லை. கண்ணீர்தான் குடும்பத்தில் என்று கேள்விப்படுகிறோம். என்ன காரணம்? உன் உழைப்புக்கேற்றஊதியம் கிடைக்கவில்லையா! இல்லை, கிடைக்கிற பணத்தை வீண் செலவு செய்கிறாயா! அல்லது, கிடைக்கவேண்டிய சம்பளத்தை நீ கேட்டு வாங்குவதில்லையா!!", என்று கேட்கிறார், ஒரு பெரியவர் என வைத்துக் கொள்ளுங்கள். மரியாதையுள்ளவனாயிருந்தால், காரணத்தைச் சொல்வான்—தவறு நீ நடப்பது என்று குறிப்பிட்டால், திருத்திக் கொண்டு, வாழ்க்கையை நடத்த ஆரம்பிப்பான். திமிர் கொண்டவனாயிருந்தால், "இது என் சொந்த விஷயம். உமக்கென்ன?", என்று கேட்பான். ஏமாளியிருக்கிறானே, அவன் கூட, "ஏமாறுகிறோம், போலும். இனிமேல் ஏமாறாமல், உரியதை வாங்கிட வேண்டும்," என எண்ணுவான். ஆனால் ஏமாளியாகவும் அதே சமயத்தில் திமிர் பாதி கலந்ததாகவும், தவறினைத் திருத்திக்கொள்வது போல் பாவனை செய்யும் வேடந்தாங்கியாகவும் இருப்பவன் ஏமாறுவதையும் உணர்வான் — சொன்னால் 'கித்தாப்பு' குறைந்து விடுமோ எனும் திமிரால் உண்மையையும் மறைப்பான் — மறைப்பதோடு மட்டுமின்றி, தான் ஏமாறுவது தவறு அல்ல என்று வாதாடவும் கிளம்புவான்.

இப்படிப்பட்ட 'கதம்ப மனிதனாக'க் காட்சியளிக்கிறார் 'கனம்' நிதியமைச்சர் சுப்ரமணியம்! சென்றகிழமைகுடியாத்தம்போய்ப் பேசினாராம். அப்போது, அவர் கூறியுள்ள சில வாசகங்கள், அவரை எந்த ரகத்தில் சேர்ப்பதென்கிற, ஐயத்தை உண்டு பண்ணியிருக்கிறது, நமக்கு.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடியில் பேசியபோது, சொன்னதாகப் படித்தோம்:

**"போதுமான நிதிவசதிகள் தென்னாட்டுக்கு இல்லை. தொழில் துறையில் தென்னாடு பின் தங்கிக் கிடக்கிறது."**

முன்னூறு கோடி கேட்டு 150ம் கிடைக்காமல், நொண்டிச் சமாதானங்களுடன் டில்லியிருந்து திரும்பிய அமைச்சர், உண்மையை உரைக்கிறார் — போதுமான நிதி உதவி, டில்லியிலிருந்து கிடைக்கவில்லை எனும் ஏமாற்றத்தால் உண்மையை உரைக்கிறார் — ஏமாளி நாம், என்பதை உணர்ந்து பேசுகிறார், என்றே எண்ணினோம்! நாமென்ன, டில்லிக்கு ஓடி, வெறுங்கையுடன் இவர் திரும்பியதையறிந்தோர் எவரும் அவ்விதமே எண்ணச் செய்வர்!!

**"இந்தி தெரிந்தால்தான் உத்தியோகங்களுக்குச் செல்லமுடியுமாமே! ஆங்கிலம் இருந்த இடத்தில் உடனடியாக இந்தியை உட்காரவைப்பதென்றால் எப்படி முடியும்? நிச்சயம், சென்னை சர்க்கார், இதுவிஷயத்தில் போராடும்."**

என்று சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற கருத்தரங்கத்தில், ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, முழக்கமிட்டார் நிதியமைச்சர். தவறினைத் திருத்திக்கொள்கிறார் அமைச்சர் — இதுகாறும் இந்தி விஷயத்திலிருந்த பிடிவாதத்தைத் தளர்த்திக்கொள்கிறார் — உண்மையை உணர்கிறார் — என்றே நம்பினோம். நாமென்ன, அவரது கூற்றினைப் படித்த எவரும், அப்படி நம்பத்தான் செய்வர்!!

ஏமாந்ததை ஒப்புக்கொண்டு, செய்திட்ட தவறினைத் திருத்திக் கொள்வது போலவும் காட்டிக் கொண்ட அவர், குடியாத்தத்தில் பேசினாராம்:

**"பம்பாய், வங்காளம் தவிர, இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்கள் சென்னை ராஜ்யத்தைவிட முன்னேற்றமடைந்திருக்கின்றன என்று நிரூபித்தால் நான் பொதுவாழ்விலிருந்தே விலகிக்கொள்கிறேன்."**

இவ்விதம் பேசினாராம்! பொது வாழ்விலிருந்தே விலகிக்கொள்கிறேன் என்றாராம்!! நிரூபிக்க முடியாது தி. மு. க.வால் — அப்படி நிரூபித்தால் நான் பொன்னெனக் கருதும் பொதுவாழ்வை விட்டே போய்விடுகிறேன்-என்றாராம். நிதியமைச்சரை அப்படிப்பட்ட சிக்கலில் வைக்க விரும்பவில்லை, நாம்! கொண்டுவந்த கல்வித் திட்டத்தை நாடு குப்பையில் விட்டெறிந்த பிறகும், இருக்குமிடம் விட்டு நகர விரும்பாத இவரின் 'பொது வாழ்வு'க்கும் அதனால் அடையும் சுகங்களுக்கும் நாம் ஏன் தடையாக நிற்கவேண்டும்!! சிரஞ்சீவி மந்திரியாக அவர் இருக்கட்டும். ஆனால் ஒன்று, இவர் ஏன், வடக்குப் போதிய உதவி செய்யவில்லை என்று ஒரு சமயம் சொல்லவேண்டும்? ஏன் இந்திவிஷயத்தில் அப்படிப் பேசவேண்டும்- இப்போது இப்படி, தெற்கை வடக்கு ஒன்றும் வஞ்சிக்கவில்லை என்று ஏன் பேசவேண்டும்?

"ஏண்டா, தம்பி! நன்றாகத் தானே பாடுபடுகிறாய். நீ இருக்கிற கம்பெனியும், நல்ல கம்பெனியாமே. ஏன், உன் வீட்டில் சதா அழுதலும் முனகலும்?"

என்று கேட்டால்.

அதனால் என்ன? "கம்பெனி மானேஜர் நன்றாக வாழ்கிறார் என்றா நினைக்கிறீர்கள்? அவர் வீட்டில், மனைவிக்கு எவ்வித நகைகளுமே கிடையாது! இங்காவது, தங்கத் திருகாணி இருக்கிறது— அதுகூட அங்கே கிடையாது!!"

என்று பதில் தந்தால், என்ன எண்ணுவோம்? தன் ஏமாளித்தனம் அல்லது திறமையற்ற தன்மையை மறைக்கத் தேடும் சான்று என்றுதானே சொல்வோம்!! அமைச்சர் சுப்ரமணியத்தை, "ஏனய்யா, தென்னாட்டுக்கு வரவேண்டிய பங்குத் தொகையை ஒழுங்காகக் கேட்டு வாங்க முடியுமா—தருமா வடக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

நாகி தூக்கிலிடப்பட்டதைப் பற்றி........

# இவர்கள் பேசினால்.....!

## ஐசன்ஹோவர்

நாகி தூக்கிலிடப்பட்டார் என்ற செய்தி என்னைத் தூக்கி வாரிப்போட்டது! காரணம், கொஞ்ச நாளைக்கு முன்னால்கூட அவர் கோடை வாசஸ்தலம் எதற்கோ போயிருப்பதாக அங்கேரி நாட்டுப் பிரதமர் காதர் சொன்னார். நானும் அப்படித்தான் நம்பினேன். நானென்ன, உலகமே அப்படித்தான் நம்பியது. எந்தத் தெளிவான விஷயத்திலும் ஏதோ சிக்கல் இருப்பதாக விளக்கம் தருவதில் நிபுணத்துவம் பெற்ற ராஜதந்திரி டல்லஸ்கூட அதை உண்மையென்றுதான் எண்ணினார்.

ஆனால் திடீரென்று ஒருநாள் ரஷ்யாவிலிருந்து செய்தி வருகிறது, நாகி தூக்கிலிடப்பட்டாரென்று! நாகி பிறந்து வளர்ந்த நாடு ஹங்கேரி! அந்த நாட்டின் பிரதமராகக்கூட இருந்தவர்தான் அவர்! ஆனால் அவர் தூக்கிலிடப்பட்ட செய்தி, ரஷ்யாவிலிருந்து வருகிறது — ஹங்கேரியிலிருந்தல்ல! அதன் பிறகுதான் ஹங்கேரியப் பிரதமர் அதைப்பற்றி வாய் திறந்திருக்கிறார்.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, தேசத் துரோகம் செய்தார் என்பது! அதனால் விசாரணைகூட நடந்ததாம்— இரகசியமாக! — உலகுக்கு அறிவிக்கப்படாமல்! எனக்கிருக்கிற சந்தேகம், அந்த விசாரணை பற்றியும், அதன் முடிவில் நாகி தூக்கிலிடப்பட்டது பற்றியும், ரஷ்யா உலகுக்கு அறிவிப்பதற்கு முன்னால்; ஹங்கேரியின் பிரதமருக்கே தெரியுமா என்பதுதான்! தெரிந்திருந்தால் அவரல்லவா முதலில் வெளியிட்டிருக்க வேண்டும் இந்தச் செய்தியை? இல்லையே, ஏன்?

ஆனால் நான், என் கருத்தை அவ்வளவு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறிடுவது நல்லதா என்று எனக்கே புரியவில்லை. அதற்குக் காரணங்கள் பல! அதில் முக்கியமானது அமெரிக்க அரசியலில் இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிற நிலைதான்!

நான் சார்ந்திருக்கிற குடியரசுக் கட்சிக்கும், பாராளு மன்றத்தில் பெருவாரியாக இடம் பிடித்துக் கொண்டிருக்கிற ஜனநாயகக் கட்சிக்கும் கொள்கையிலே இருக்கிற வேறுபாடு, கோட்பாட்டிலே இருக்கிற பேதாபேதம் இன்னது

M. S. வெங்கடாசலம் M. A.,

என்று இன்னமும், எனக்கும் என் போன்ற தலைவர்களுக்குமே சரியாக விளங்கிடவில்லை. கம்யூனிசத்தை எதிர்ப்பதிலோ, முதலாளித்துவத்தை வளர்ப்பதிலோ எங்களுக்குள்ளே எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. அமெரிக்காவின் செல்வாக்கு, அகிலமெங்கும் பரவ வேண்டும் என்ற அவா இரண்டு கட்சிகளுக்குமே உண்டு. ஆனாலும், ஒரு நோய் இங்கே இருக்கிறது — அது ஜனநாயகத்துக்கே உரித்தான நோயோ என்றுகூடக் கருதுகிறேன். அந்த நோயால் தாக்கப்பட்டு இன்று நான் படுகிற அவதி! அம்மம்மா! என்னென்று சொல்வது?

வளம் பெறாத நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் — அப்போதுதான் அங்கெல்லாம் நம்முடைய செல்வாக்கு வளரும்— என்று சொல்லித்தான் பாராளு மன்றத்தில் மசோதா கொண்டு வந்தேன்; அவ்வாறு, உதவுவதற்காக 870-டாலர் ஒதுக்கிட வேண்டும் என்று கோரினேன். ஆனால் பாராளு மன்றம் அந்தத் தொகையில் நான்கில் ஒரு பங்கினைத்தான் அங்கீகரித்திருக்கிறது! எப்படியிருக்கும் என் நிலை?

பக்கத்து நாட்டிலே பிரதமராயிருந்த நாகியை, யாருக்கும் அறிவிக்காமல், தூக்கிலிட முடிந்தது, குருஷேவால்! ஆனால் நான்? அவனது தலை வேண்டும் — இவனது உயிரை வாங்கியாக வேண்டும்—இன்னாரின் குருதியைக் குடித்தாக வேண்டும — என்றா கேட்டேன்! நான் கேட்டதெல்லாம் மற்ற நாடுகளுக்கு உதவி செய்தாக வேண்டும, அதற்குத் தொகை ஒதுக்குங்கள் என்றுதான்! ஆனால் என் ஆசை நிராகரிக்கப்பட்டது — குருஷேவின் ஆசை, தங்கு தடையில்லாமல் நிறைவேறியிருக்கிறது!

என்ன உலகமிது? நல்லது செய்யத் தடை — தீயது செய்யத் துணையா?

இங்கிலாந்து அரசனை, "ரப்பர் ஸ்டாம்ப் அரசன்" என்பார்கள். ரஷ்யப் பிரதமர் பெற்றிருக்கிற அதிகாரமோ அளவு கடந்தது! ஆனால் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியின் நிலை இக்கட்டானது —இரண்டிலுமே சேராதது.

அதிகாரம் தரப்படவில்லையென்றாலும், இங்கிலாந்து நாட்டு அரசனுக்குத் தரப்பட்டிருக்கும் அந்தஸ்து அளவு கடந்தது, மதிப்பு அளவு கடந்தது என்பது மட்டுமல்ல — பொறுப்புகள் மிக மிகக் குறைவு. 'அரசன் எந்தத் தவறுமே செய்ய முடியாது என்பது அந்த நாட்டு சித்தாந்தம். அதனால் அரசன் செய்கிற எந்தத் தவற்றுக்கும், பிரதம மந்திரியே பொறுப்பாளி! ஆனால் இங்கு?

இங்கிலாந்து அரசனுக்கோ அரசிக்கோ தரப்படுகின்ற அந்தஸ்து இந்த நாட்டு ஜனாதிபதிக்குத் தரபபடவில்லையே என்பதற்காகக்கூட நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை' ஆனால் எனது செயலாளராக இருக்கின்ற ஷேர்மன் ஆடம்ஸ் மீது சாட்டப்பட்டிருக்கின்ற இலஞ்ச ஊழல் குற்றத்தின்போது என்பெயரும் அடிப்படுகிறது—என் கட்சியின் பெயரும் களங்கப் படுத்தப்படுகிறது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் என் கட்சி வெற்றி பெறுமா என்றே சந்தேகப் படவேண்டிய சூழ்நிலை! அதற்காகத்தான் வருந்துகிறேன்.

குருஷேவ் பெற்றிருக்கிற அதிகாரம் எனக்கில்லை—இங்கிலாந்து நாட்டு மணிமுடிக்குத் தரப்பட்டிருக்கிற அந்தஸ்தும், நான் அமர்ந்திருக்கிற ஆசனத்திற்குத் தரப்படவில்லை! நாகி தூக்கிலிடப் பட்ட செய்தியறிந்து, நான் இதைத்தான் எண்ணுகிறேன்! ஆனால் அமெரிக்க ஜனநாயகத்தில் உள்ள சிறப்பான பண்பு இது; என்றும் கருதுகிறேன். ஏனென்றால் அதிகாரம் இருக்கிறது—அதற்கு வரம்பும் இருக்கிறது'

இருந்தாலும் பாராளுமன்றம் அதிகாரததை நல்ல முறையிலே நான் பயனபடுத்த முயலுமபோது, குறுக்கிட்டிருக்கவேண்டியதில்லை...! உமம்! எனன செய்ய?

## பண்டித நேரு

"இந்தியாவைப பற்றிய கண்டுபிடிபபு" எனறு புத்தகம் எழுதினேன். இப்போது எனக்கிருக்கிற ஆசை, "உலகத்தைப் பற்றிய கண்டுபிடிப்பு" என்றொரு புத்தகம எழுதவேண்டும் எனபது!

இரண்டு புத்தகங்களுக்கு மிடையே நிறைய ஒருமைப்பாடுகள் இருக்கும் என்பதை என்னால் உணரமுடிகிறது. இந்தியாவைப் பற்றி எழுதுமபோது சில கசப்பான உண்மைகளை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. 'பாரதம் ஒனறுதான்' எனறு இன்றைக்கெல்லாம், சென்றவிடமெங்கும் சொல்லுவதற்குக் காரணம், அது ஒன்றல்ல — என்றும் ஒன்றாக இருந்த நாடல்ல — பல இன, மொழி மக்களைக்கொண்ட உபகண்டம்—என்பதை நானே அறிவேன். அந்த உண்மைகளை — அவை எனது உள்ளத்திற்குக் கொஞ்சம் கசபபாக இருந்தாலும் — ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று, நான் எழுதிய அந்த நூலில்! அவற்றையெல்லாம் ஒப்புக்கொள்ளாமல் இருந்திருந்தால், என்னை நேர்மையாளன் என்று யார் ஒப்புவார்கள்? என் நூலுக்கு எந்த வரலாற்று ஆசிரியர் மதிப்புக்கொடுப்பார்? அதற்கு அகில உலகப் புகழும், ஆங்கில இலக்கிய உலகத்தில் ஒரு உன்னத இடமும் எப்படிக் கிடைத்திருக்கும்?

கசப்பான உண்மைகளையும் மறைக்காமல் வெளியிடுவதுதான் வரலாற்று ஆசிரியனது பணி! அந்தப பணியை இந்த பாரதத்தின் வரலாற்றைப் பொறுத்த வரை செவ்வனே செய்து முடித்த நான், உலகத்தைப் பற்றி எழுதினாலும் அதே கண்ணியமான பாதையைத்தான் கடைப்பிடித்தாக வேண்டும்—கசப்பான உண்மைகள் பலவற்றை ஒப்புக்கொண்டே தீரவேண்டும்!

என்ன அந்தக் கசப்பான உண்மைகள் என்பதை உலகம் அறியும் —நானே கூட நாகி தூக்கிலிடப் பட்ட செய்தி எட்டியதும வெளிப் படையாகச் சொல்லிவிட்டேன.

உலகில் போரில்லாமல், பிணக்கில்லாமல், மக்கள அமைதியாக வாழ்ந்திட இதோ நான கண்டுபிடித்திருக்கும அருமருந்து என்று, எங்கெஙகெல்லாம சென்றேனோ அங்கெல்லாம பஞ்சசீலத்தைப் போதித்தேன. அமெரிக்காவிலும்தான் போதித்தேன்—ரஷ்யாவிலும எடுத்துரைத்தேன். அதை ஏற்றுக்கொளளாத நாடில்லை-அந்தத் தத்துவத்தின மகத்துவத்தைப் போறறிப் புகழாத அரசியல் தலைவனில்லை.

ஆனால், அந்தப் பஞ்ச சீலம் எப்படிப் பயனற்றுப் போய்விட்டது—தத்துவார்த்த நிலையோடு நின்றுவிட்டது — என்று எண்ணும்போது என்நெஞ்சம் கொதிக்கிறது.

"அந்நிய நாடுகள் விவகாரத்தில் தலையிடக்கூடாது" என்னும் கொள்கை பஞ்சசீலத்தில் ஒரு அங்கம்! ரஷ்யாவும் அதை ஏற்றுக் கொண்ட நாடுதான்.

ஆனால் இன்று நடந்ததென்ன? ஹங்கேரி நாட்டு விவகாரங்களில் ரஷ்யா தலையிட்டது என்பது மட்டுமல்ல—அந்த நாட்டின் முன்னாள் பிரதமரின் தலையையே வாங்கிவிட்டது! இதுவா பஞ்சசீலக் கொள்கையினை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளம்?

நான் உலகிற்கு உவந்தளித்த மாமருந்து பஞ்சசீலம் என்று பலர் போற்றுவதைக்கேட்டு பூரித்துப் போயிருக்கிறேன்! ஆனால், அந்தப் பஞ்சசீலம் இப்படிக் காற்றில் பறக்கவிடப்படுவதை எண்ணிடும்போது என் நெஞ்சம் கொதிக்கிறது. இந்தக் கசபபான உண்மையை, பற்பல ராஜ தந்திரிகளைப் போல், எனனால் மறைத்துக்கொள்ள இயலவில்லை.

"உலகைப்பற்றிய கண்டுபிடிப்பு" எழுதினால், இதனை நான் ஒப்புக்கொண்டே தீரவேண்டும.

"போரைவிட போருக்குப் பின்னால் ஏற்படுகின்ற விளைவுகள் மிகவும் பயங்கரமானவை" எனறு நானே முன்னர் எழுதியிருக்கிறேன். அந்த வாசகங்கள்தான் இப்போது என் மனக்கண் முன்னாலே வந்து நிற்கின்றன. காரணம் என் பஞ்சசீலக் கொள்கை தோற்றது எனறு நான் எண்ணுமபோது அதற்குப்பின்னால் ஏறபடவிருக்கிற விளைவுகளை எண்ணிப் பார்க்கிறேன!

விளைவுகள் என்று நான் குறிப்பிடுவது, அகில உலக அரசியல் நிலையில் ஏறபடக்கூடும என்று நான கருதுகினற விளைவுகளைப் பற்றி மட்டுமல்ல! உள்நாட்டு அரசியல் நிலையில் என்ன ஏற்படக்கூடும எனபதை எண்ணிப்பார்க்குமபோதுதான என் உள்ளம் மிகவும் வேதனைப்படுகிறது.

உள்நாட்டு விவகாரங்களில் நானும், நான் நடத்திச் செல்லு

இற அரசாங்கமும் சாதித்திருக்கிற சாதனைகளை நாடறியும்! மக்களின் அல்லல் தீரவில்லை-ஐந்தாண்டுத் திட்டம் தவிடு பொடியாகிறது—திட்டக் குழுவிலிருந்து ஒவ்வொருவராக வெளியேறிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையில் என் வெளிநாட்டுக் கொள்கையிலும் எனக்குத் தோல்வியென்றால்...? எண்ணவே மறுக்கிறது இதயம்! இங்கிலாந்திலும் எகிப்திலும்—அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும்—சீனத்திலும் ஜப்பானிலும்-ரஷ்யாவிலும் மற்றும்பல நாடுகளிலும் எனக்கிருக்கிற செல்வாக்கைப் பாரீர் என்று எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வேன்?

“அவ்வளவு செல்வாக்கு இருந்தால், உங்கள் பஞ்சசீலத்திற்கு அவ்வளவு மதிப்பும் மகத்துவமும் இருந்தால், நாகி தூக்கிலிடப்பட்டதை உங்களாலே ஏன் தடுக்க முடியவில்லை?” என்று கேட்டால், அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்ல — “நான்சென்ஸ்” என்பதைத் தவிர?

## குருஷேவ்

நான் ஒரு மகத்தான தவறு செய்துவிட்டேன். கம்யூனிஸத்துக்கே உரித்தான இராஜ தந்திர நெறியிலிருந்து தவறிவிட்டேன்! நாகி தூக்கிலிடப்பட்டதென்னவோ உண்மைதான்! ஆனால் அந்த உண்மையை நான் வெளியிட்டுத்தான் ஆகவேண்டுமென்று என்ன இருக்கிறது? வெளியிட்டதால்தானே திடீரென்று என்மீது நம்பிக்கையில்லையென்று சொல்லுகின்றன முதலாளித்துவ நாடுகளெல்லாம்!

இரும்புத் திரைக்குள்ளே என்ன நடக்கிறதென்று வெளியுலகிற்குத் தெரிந்திட நியாயமில்லை. அதனால், நாகியைப்பற்றி நான் எந்தத் தகவலும் தராமலிருந்தாலும், உண்மையை யாரறியப் போகிறார்கள்?

ஆனால் நான் எண்ணியது வேறு, நடைபெற்றது வேறு! நாகியைப் பற்றிய தகவலை நான் வெளியிட்டதற்கே காரணம், கம்யூனிஸ்டு நாடுகள் ரஷ்யாவுக்கு எந்த அளவு பணிந்துபோக வேண்டும் என்று அவைகளுக்கு வலியுறுத்துவதற்குத்தான்! இதைப் பயமுறுத்தல் என்று பலர் கருதக்கூடும்—ஆனால் பாட்டாளி வர்க்க உலகம் நிறுவப்படுவதற்கு வேறு வழி? “உலகப் பாட்டாளி மக்களே ஒன்றுபடுங்கள்” என்றுதானே கார்ல் மார்க்ஸ் எழுதினார்! அந்த ஒருமைப்பாட்டை நயத்தாலோ பயத்தாலோ ஏற்படுத்தித்தானே தீரவேண்டும்? உலகில் முதலில் கம்யூனிஸத்தை ஏற்றுக்கொண்ட காரணத்தால், ரஷ்யாவுக்கு அத்தகைய கடமையும் உரிமையும் இருக்கிறது! இதனை யார் மறுக்க முடியும்?

கம்யூனிஸ்டு நாடுகளுக்கிடையே இத்தகையதொரு தொடர்பு ஏற்படுத்துவதற்காகக் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை “கோமின்பார்ம்” என்றொரு அமைப்பு இருந்தது, உலக நாடுகளெல்லாம் அந்த அமைப்பைக் கண்டு ஐயமும் அச்சமும் கொண்டதால் அதனைக் கலைத்துவிட்டேன், அப்படிக் கலைப்பது, ஸ்டாலின் பாதையிலிருந்து நான் விலகுகிறேன் என்று உலகுக்கு எடுத்துக்காட்ட மகத்தான ஒரு சாதனமாக எனக்குப் பயன்பட்டது, ஆனால் அதன் விளைவுகள் .........?

“நூறு மலர்கள் மலரட்டும்” என்று மாசேதுங் ஒரு புறம் பேசுகிறார். கம்யூனிஸத்தை அடைவதற்கு ரஷ்யாவின் பாதை சிறந்ததா சீனத்தின் பாதை சிறந்ததா என்று கம்யூனிஸ்டுகளுக்குள்ளேயே விவாதம் நடைபெறுகிறதென்றால், ரஷ்யாவிற்கு உள்ள தனி மதிப்பும் மகத்துவமும் என்ன ஆவது?

நூறு மலர்கள் மலரட்டும் — வேண்டாமென்று சொல்லவில்லை! ஆனால் அந்த மலர்கள், சூரியகாந்தி மலர்களாக இருக்கவேண்டுமென்பதுதான் என் ஆசை—ரஷ்யா சூரியனாகக் கருதப்படவேண்டும்!

ஆனால் அப்படியில்லையே நிலை! ஹங்கேரியிலும் போலந்திலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ரஷ்யாவையே எதிர்த்துப்போராட்டம், நடத்துகிறார்கள் என்றால் எப்படி அதைக்கண்டு நான் சகித்துக்கொண்டிருக்க? அந்தப் போராட்டங்களை இன்று நான் நசுக்காவிட்டால், மார்க்ஸியப் பாதையிலிருந்து நான் விலகிப் போவதாக என்மீது புகார் ஏற்பட்டு, ஸ்டாலினுக்கு நான் கொடுத்த மரியாதையே எனக்குத் திரும்பக் கிடைத்தால்? அதுவாவது பரவாயில்லை, இறந்த பின்னாலே கிடைக்கின்ற இழிவு! பெரியா, மாலங்கோவ் இவர்களுக்கெல்லாம் ஏற்பட்டகதி எனக்கும் ஏற்பட்டுவிட்டால்?.........தவறு, தவறு! மாலங்கோவ் இன்னமும் உயிரோடு இருக்கிறார்! அப்படித்தான் மாஸ்கோ ரேடியோவிலும், “பிராவ்டா”விலும் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகள் கூறுகின்றன! எனக்கு ஏற்பட்டிருக்கிற குழப்பத்தில் இப்படிச் சொல்லிவிட்டேன்! மாலங்கோவ் உயிரோடுதான் இருக்கிறார்!

எனவே ஹங்கேரியிலும் போலந்திலும் நடைபெற்ற கிளர்ச்சிகளை, ரஷ்யாவின் முழு பலத்தைக் கொண்டும் அடக்கியதற்கு முக்கிய காரணம் என்னை நானே காப்பாற்றிக்கொள்ளுவதுதான்!

ஆனால் சூழ்நிலை என்னை அதோடு நிறுத்தவில்லை! ரஷ்யாவில் ஆட்சிப் பொறுப்பிலிருப்பதைப்போல் பயங்கரமானதும் அபாயகரமானதும் உலகத்தில் வேறெதுவும் இருக்க முடியாது! துரும்பைக் கண்டாலும், அதனுள்ளே எந்த எதிரி ஒளிந்துகொண்டிருக்கிறானோ, நம்மைக் கொல்லுவதற்கு அதனுள் எந்தச் சக்தி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறதோ என்று அஞ்சவேண்டிய நிலை!

அதனால் என்னைக் காப்பாற்றிக் கொள்ள என் நாட்டு கம்யூனிஸ்டுகளுக்கு என்மீது நம்பிக்கையை ஏற்படுத்த — அடுத்தொரு ஆயுதத்தையும் பிரயோகித்தேன்! அதுதான் நாகிக்குத் தூக்கு தண்டனை என்பது!

### வாழ்க்கைச் செலவுப் புள்ளி

28—6—58 உடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச்செலவு 3 புள்ளி அதிகம் ஆனது; அரிசி, பருப்பு, காய்கறி மற்றும் மிளகாய் விலை உயர்வே இதற்குக் காரணம்.

நாகிக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனை உண்மையிலேயே ஒரு ஆயுதம்—அதுவே எனது முடிவு என்பதல்ல! ரஷ்யாவிலிருந்து விலகிச் செல்லும் கம்யூனிஸ்டு நாடுகளுக்கு—சிறப்பாக யூகோஸ்லாவியாவிற்கு — ஒரு பாடமாக, பயமுறுத்தலாகத்தான் அதனைப் பயன்படுத்தினேன்!

ஆனால்...? ஆனால்...? என் குறி தப்பிவிட்டது? யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிடோ இதற்கெல்லாம் அஞ்சுவதாக இல்லை! என் குறி தப்பிவிட்டதே என்பதிலே கூட எனக்கு அவ்வளவாக வருத்தமில்லை! ஆனால் அதன் விளைவுகள்......? ரஷ்யாவில் ஒரு குறிக்கோளில் ஏற்படும் தோல்வி என்பது ஆட்சியிலே இருப்பவர்களுக்குச் சாதாரணமானதல்ல! அதுவே தேசத் துரோகமாகவும் கருதப்படலாம்! அந்த நிலை ஏற்பட்டால்...? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது!

**ஏ. கே. கோஷ்**

என்ன இக்கட்டான நிலை! நாகி தூக்கிலிடப்பட்டார்! அவர் செய்த குற்றமென்ன? இல்லை, இல்லை! அவர் செய்ததாக நாம் சாட்டுகிற குற்றமென்ன? ஹங்கேரி அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தார் என்பது!

அரசாங்கத்தைக் கவிழ்ப்பது ஏன்? எப்போது? ஜனநாயக நாடுகளிலெல்லாம் ஒரு அரசாங்கம் சரிவர நடைபெறவில்லையென்றால் அதை மாற்ற அமைதியான முறைகளிலேயே வழிவகைகள் இருக்கின்றனவே! அந்த முறைகள் ஜனநாயகமில்லாத நாடுகளில் இல்லை! அப்படியானால் ஹங்கேரியில் நடப்பதும் ஜனநாயகம்—போலந்தில் பொலிவதும் ஜனநாயகம் — சீனத்தில் இருப்பதும் ஜனநாயகம் — ரஷ்ய ஆட்சியும் ஜனநாயக ஆட்சிதான் — என்று நான் கூறிவந்த சித்தாந்தம் என்ன ஆவது? இவையெல்லாம் "உழைப்பாளர் ஜனநாயகம்", மற்றவையெல்லாம் "முதலாளிகளின் ஜனநாயகம்" என்று நாம் சொல்லிவந்த சித்தாந்தம், யதார்த்தவாதம் என்ன ஆவது? ஒன்று நம்மை ஏமாளிகள் என்று மக்கள் கருதுவார்கள் — இல்லையென்றால் கைதேர்ந்த எத்தர்கள் என்று சொல்லுவார்கள்!

இரண்டு பெயர்களுமே அரசியல் வாதிகளுக்குக் கிடைக்கக் கூடாதவைதான். ஆனால் இன்று எனக்கு முன்னுள்ள பிரச்சினை, இரண்டில் எது பரவாயில்லை என்பதுதான்!

"நாகியைத் தூக்கிலிட்டது தவறு—அது ஜனநாயக முறையல்ல—மனிதப் பண்புக்கு அப்பாற்பட்டது" என்று இனிநானும் என்னைச் சார்ந்த கம்யூனிஸ்டுகளும் சொன்னால், "ஆகா அப்படியானால் இதுவரை ரஷ்யாவைப் பாரீர், சீனாவைப் பாரீர், என்று நீங்கள் சொல்லிவந்ததெல்லாம் தவறுதானே" என்று கேட்பார்கள்! ஆம் என்றுதானே சொல்லியாகவேண்டும்! "அப்படியானால், இதுவரை நீங்கள், அந்த நாடுகளைப்பற்றி தப்புக் கணக்கு போட்டுக்கொண்டிருந்தீர்கள், ஏமாளிகளாக இருந்தீர்கள், இல்லையா!" என்று கேட்பார்கள், மக்கள். என்ன சொல்வது அவர்களுக்கு?

ஆனால் இப்படிச் செய்வதை விட்டுவிட்டு "நாகியைத் தூக்கிலிட்டது சரிதான்" கம்யூனிஸ்டுக் கட்சி சொல்ல ஆரம்பித்தால், யார் நம்புவார்கள் அதனை? அமிர்தசரஸ் மாநாட்டில் "ஜனநாயகம்தான் நாங்கள் விரும்புகிற ஆட்சிமுறை" என்று நம்மாலே நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானத்தை மனப்பூர்வமாகப் போடப்பட்ட தீர்மானம் என்று எப்படி ஏற்பார்கள்?

தீர்மானம் நிறைவேற்றி மாதங்கள் மூன்று நான்குகூட இன்னமும் முடியவில்லை—அதற்குள்ளாகவா இப்படிப்பட்டதோர் இக்கட்டான நிலை வந்து சேரவேண்டும்.

ஆனால், நல்ல வேளையாக, நாகி தூக்கிலிடப்பட்டசெய்தி வெளியான சமயத்தில் நான் இந்தியாவிலில்லை. இந்தியாவில் இருந்திருந்தால் செய்தி வெளியானவுடன் என் கருத்தைக் கேட்டறிந்து கொள்ள, இந்தப் பாழும் பத்திரிகை நிருபர்கள் என்னைக் குடைந்தெடுத்திருப்பார்கள்.

அதனால் எனக்கு சிந்திக்க நிறைய அவகாசம் கிடைத்திருக்கிறது. ஆனால் சிந்தனையை அதிலே செலுத்தச் செலுத்த, எனக்கு என்னென்னவோ பயங்களெல்லாம் ஏற்படுகின்றன.

முதல் பயம், ஷேக்அப்துல்லாவின் நிலையையும், நாகியின் கதியையும் எண்ணிப் பார்த்திடும்போது ஏற்படுகிறது. எனக்கென்னவோ இரண்டு பிரச்சினைகளிலும் ஏராளமான ஒருமைப்பாடு இருப்பதாகத் தோன்றுகிறது.

ஹங்கேரியும் தனிநாடுதான்—காஷ்மீரும் தனி நாடுதான். இரண்டுக்கும் தனியான அரசியல் அமைப்புகள் இருக்கின்றன. அப்படியிருக்க ஷேக் அப்துல்லாவை நேரு சர்க்கார் கைது செய்ததையே கண்டித்து நியூஏஜ் இதழில் கட்டுரை வெளியிட்டேனே. நாகி தூக்கிலிடப்பட்டிருக்கிறார்! இதைக் கண்டிக்காமல் எப்படி இருக்கமுடியும் என்று எனக்கே புரியவில்லை.

எனக்கிருக்கிற அடுத்த பயம், அவ்வாறு கண்டனக் குரல் எழுப்பினால் என்ன ஆகும் என்பதுதான்! கம்யூனிஸ்டு கட்சி போய்க்கொண்டிருக்கிற போக்கைப் பார்க்கும் போது, எந்தப் பாதை இடது சாரிக் கொள்கை என்று கருதப்படும், எது வலது சாரிக் கொள்கை என்று எண்ணப்படும் என்றே என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை.

அமிதவாதக் கொள்கையை வைத்துக்கொண்டு இருந்ததற்காக ரணதிவேயைத் தலைமைப் பதவியிலிருந்து எறிந்துவிட்டு என்னை அந்த இடத்திலே அமர்த்தியிருக்கிற கட்சி, என்னிடமும் அதே முறையில் நடந்துகொண்டால்? காலமே, நீதான் எனக்கு வழிகாட்ட வேண்டும்!—என்னைக் காப்பாற்ற வேண்டும்!!

★

ஆட்சி ஒரு சாராரிடம் மட்டும் சிக்கினால், பழைய கொடுமைகளே புதிய உருவில் தோன்றும். ஒரு சாரார் மட்டுமே அரசாளலாம் என்றிருக்குமானால், சுதந்திர வீறு புரட்சிக் கனலாய்ப் புறப்படும். உலகத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகளெல்லாம் இவ்வாறுதான் தோன்றியுள்ளன.

# இலக்கியத்தில் பறவையினங்கள்!

[பேரா. மறைமலை]

கற்றாரையும் மற்றாரையும் களி வெள்ளத்தில் ஆழ்த்தும் காவிரியிலே, பன்னிறப் பறவைகளின் பாங்கைக் காண்கிறோம். வண்ண மலர்களும், வளமைமிக்க மரங்களும் சூழ்ந்துள்ள அச்சோலை தன்னில் ஒரு மருங்கே குயில் இன்னிசை பாடும், அதற்கேற்றாற்போல மயில் நடனம் ஆடும். ஓடையின் மருங்கே இணைந்த புறாக்கள் காதல் மொழி பேசும்—கொஞ்சும். மரகதப் பச்சையும், மாணிக்க மூக்கழகும் கொண்ட வண்ணக் கிளிகள் எதை எதையோ பேசும்!

தாமரைத் தடாகத்திலே வெண்ணிற அன்னம் இக்காட்சிகளைக் கண்டு களிப்புற்ற வண்ணம் நீந்தும்.

இயற்கையன்னை களி நடம் புரியும் சூழலில் தன் இனங்கள் மகிழ்ந்தாடும் பாங்கைக் கண்ட பறவையினங்கள் பரவச வெள்ளத்தில் ஆழ்ந்து இங்கு மங்கும் பறக்கும். பழம்பெரு தமிழகத்தில் பகலவனது ஒளி போல அன்புசால் அறிஞர்களும், பண்புசால் புலவர்களும் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்க்கைக்கு வேண்டும வளமுள்ள கருத்துக்களைத் தங்கள் தங்கள் பாடல்களிலே பரக்கக் கூறியுள்ளார்கள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன வாழ்ந்த திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலிய பெரும் புலவர்கள் தேன் பிலிற்றும் பனுவல்களில் பறவையினங்களை உதாரணமாகக் கவியில் சேர்த்துக்கொண்டதை நாம் கண்டு இன்புறலாம்.

தலைவன் ஒருவன் ஒரு பெண்ணைக் கண்டு ஆச்சரியமுறுகிறான். காரணம்? அவள் எழில் பெற்ற எந்திழையாகத்தான் இருக்கவேண்டும்: அவன் அவளைக் கண்டதும்,

"அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ
கனங்குழை
மாதர் கொல்மாலு மென் நெஞ்சு"

என்று எண்ணி மயங்குகிறான்.

இவள் அழகான மயிலோ? மனிதப் பெண்ணோ? என்று துணிய முடியாது நெஞ்சு மயங்குகின்றதே! என்கிறான்.

பண்டைப் புலவர் பெருமக்கள் அனைவரும் காரிகைக்குத் தங்கள் கவிதையிலே இடமளித்திருக்கின்றனர். பெண்களின் அழகை வர்ணிக்காத புலவர்களே இல்லையெனலாம். அப்படிப் பெண்களைப் பற்றிக் கூறும்போது, அவர்களின் எழில் நலத்தைப் பாராட்டுகையில் தக்க உதாரணங்கள் கொடுக்கவேண்டியிருந்தது. பறவையினங்கள் மற்றும் பலவற்றை அவர்கள் அதற்கேற்ப அமைத்துப் பண்பாடினார்கள்.

'சுற்றந்தழால்' என்னும் அதிகாரத்தின் கண் வள்ளுவர் உறவினரைப் பேணும் விதத்தை விளக்குகின்றார். சுற்றப் பெருக்கம் உண்டாக என் செய்வது? இதற்கு உதாரணமாக வள்ளுவர்,

"காக்கை கரவா கரைந்துண்ணும்"

என்றார். காக்கையானது இரையைக் கண்டதும் மறைக்காது தம் இனத்தை அழைத்து உண்ணும். அத்தகைய இயல்பினருக்கே சுற்றப் பெருக்கமும் உண்டாகும். இதை,

"ஆக்கமும் அன்ன நீரார்க்கேயுள"

என்றார். இக்குறளில் காக்கையினது சிறப்பைக் காண்கிறோம்.

"காலமறிதல்" அதிகாரத்தின் கண் இரு குறள்: காலம் இன்றியமையாததுதான். சிலர் காலத்தைப் பொன்னேபோல் போற்றிச் செயலாற்றுவர். சிலர் காலத்தை வீணே கழித்து உறங்குவர். இதனால் 'கதைகள் பேசிக் காலம் போக்காதே!' என்ற மொழியும் எழுந்தது.

பகலிலே காக்கையானது தன்னிலும் வலிய ஆந்தையை வெல்லும். அதுபோல பகைவரை வெல்லக் கருதும் மன்னர்களுக்குக் காலம் இன்றியமையாதது, என்கிறார் வள்ளுவர். காலத்தைச் சொல்லி காக்கையையும், ஆந்தையையும் காட்டுகிறார்.

"பகல் வெல்லுங் கூகையைக் காக்கை
இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

அடுத்த குறளில் 'கொக்கு' வருகிறது.

"கொக் கொக்க கூம்பும் பருவத்து
மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

'காலம்' வாய்த்தபோது கொக்கைப்போல — கொக்கு மீனைக் குத்துவதுபோல தவறாமல் முடிக்க வேண்டும் என்றார்.

நாரையைப்பற்றி ஒரு புலவர் கூறுகிறார்.

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர் வாய்ச் செங்கால் நாராய்!"

"நாரையே, சிவந்த கால்களையுடைய நாரையே! பனம்பழத்தின் கிழங்கைப் பிளந்ததுபோல், பவள நிறங்கொண்ட வாயையுடைய நாரையே!" என்கிறார் சத்திமுற்றத்துப் புலவர்.

கண்ணகியின் சாயலையும் நடையையும், மொழியையும் கோவலன் புகழுங்கால்,

"மா இரும் பீலி, மணிநிற மஞ்ஞை; நின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்
அன்னம் நல் நுதல்! மென் நடைக்கு அழிந்து
நல்நீர்ப் பண்ணை நளி மலர்ச் செறியவும்
அளியதாமே சிறு பசுங்கிளியே......"

(சிலம்பு: மனை: 53: 57]

மயில் உன் சாயலுக்குத் தோற்று கானகத்தை அடைந்தது;

அன்னம் உன் நடையழகைக் கண்டு நாணி மருதநில மடைந்தது;

கிளி உன் மொழிக்குத் தோற்று வருத்தமுற்றது, என்று.

கோவலன் கண்ணகியின் எழிலை வர்ணிக்கிறான்—இளங்கோவடிகள் கண்ணகியின் சாயலுக்கு மயிலையும், நடைக்கு அன்னத்தையும், மொழிக்குக் கிளியையும் உவமையாகக் கூறியிருக்கும் திறம் மகிழ்தற்குரியது.

காவிரி ஆற்றின் ஒலியும், பறவைகளின் ஓசையையும் இளங்கோ அடிகள் குறிப்பிடுகின்றார். பூம்பொழில் தன்னில் ஆம்பல் கோழியும். நாரையும், செங்கால் அன்னமும், . பைங்கால்

கொக்கும், 'கானக் கோழியும் நீர்க்காக்கையும், உள்ளான் பறவையும், குளுவைப்பறவையும், புள்ளும், பெருநாரையும் ஆக இவைகளின் ஓசைகள் 'வெல்போர் வேந்தர் முனையிடம் போல' ஒலித்தன என்கிறார்.

"...கம்புள் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்கால் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போல
பல்வேறு குழூஉக்குரல் பரந்த ஓதையும்"

(சிலம்பு: நாடுகாண் 114—119)

பழங்காலத்தில் பாணர்களும் விறலிகளும்பண்ணிசைத்துப் பார் வேந்தர்களின் பரிசில்கள் பெற்றதைப் பண்டை இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வறுமையுற்றக் காலத்தில் பாணர்கள் மன்னர்களைத் தேடிச் சென்று, அவர் தரும் பொருள் பெற்று மகிழ்வர். இதனைப் புலவர்கள் கூறும்போது, பரிசில் தரும் வள்ளலைத் தேடிச் செல்லும் புலவரின் வாழ்க்கையைப் பழுமரம் தேடிச் செல்லும் பறவை போன்றது' என்றனர். இதை பெரும்பாணாற்றுப் படை, மலைபடுகடாம் முதலிய நூல்கள் விளக்குகின்றன.

"பழுமரம் தேடும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண"

(பெரும்பாணாற்றுப்படை 20—22)

"நீயிரும்
கனிமொழி கானம் [illegible] யொடு உணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளினும் மான...
உள்ளினிர் சேறிர் ஆயின்"

(மலைபடுகடாம் 53—65

'அசுணமா' என்றொரு பறவையுண்டு அது இன்னிசை கேட்டு மயங்கும். அதனைப் பிடிக்க எண்ணுவோர், இனிய யாழ் வாசிப்பராம். அது கேட்டு அது மகிழ்ந்து இருக்குமாம். அப்போது அதைப் பிடித்துக்கொள்வார்களாம். இன்னா இசை கேட்டால் வீழ்ந்திடுமாம்.

'இசைகொள் சீறி யாழின்னிசை கேட்ட
அசுண நன் மாவந்நிலைக் கன்னோ
பறையொலி கேட்டுத்தன்படி மறந்ததுபோல'

(பெருங்கதை, உஞ்சை 1-47 241-3)

இதுபோன்று பலப்பல கருத்துக்களை எடுத்தெழுதலாம். அவைகளையெல்லாம் விரிக்கின் கட்டுரை பெருகும்!

★



# இதுதான் உலகம்!

—[ ச. வே. பாண்டியன் ]—

மேதை "கோல்டுசிமித்" குறிப்பிட்டுள்ளபடி எண்ணத்திற்குக் கடிவாளமிட முடியுமா என்ன? எண்ணங்கள் எங்கெங்கோ சிறகடித்துச் சென்று வருகின்றன. ஆம்! இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று எண்ணக் கோவையில் நன்குகப் படுகிறது!

அன்றுதான் என் தலையில் பேரிடி ஒன்று விழுந்தது! இயற்கை என்னை மாளாத வருத்தத்தில் உழலுமபடி செய்துவிட்டது. தாங்கொணாத் துயரத்தை என்மேல அள்ளித் தெளித்துவிட்டது—காலம். ஆம்! என் அருமை அண்ணனை இப்பூவுலகம் தாங்காது தன் வயிற்றிற்குள் இழுத்துக்கொண்டுவிட்டது. எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் இப்பிரிவை? துயரத்தால் துடித்தேன்!

போகக்கூடிய பருவமா என்ன? முப்பத்து இரண்டு வயதடைந்த வாலிபர்! உருண்டு, திரண்ட கருத்த மேனி! எடுப்பான தோற்றம்! மறைந்துவிட்டான் என்பதை எப்படித் தாங்கிக்கொள்வேன்?

எல்லார்க்கும் ஏற்படுவதுதானே என்று இயல்பாகக் கூறி வருத்தப்படுவதற்கில்லை. ஏனெனில் அவருக்கும் எனக்கும் இருந்த தொடர்பு மிகவும் அருமையானதாகும்! என் எதிர்காலத்தைப்பற்றி உயர்ந்த கனவு கண்டுகொண்டு அது நிறைவேறும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்! எனது வளர்ச்சியைத் தனது வளர்ச்சியாகக் கருதியவர்! நான் ஒரு பட்டத்தை எட்டிப்பிடிக்கும் அளவிற்கு வந்திருக்கிறேன் என்றால் அதற்கு அடிகோலியவர் என் அண்ணனே! பகுத்தறிவுப் பாதையை எனக்குக் காட்டியவர். எனக்கு மட்டுமா? இல்லை, எங்கள் கிராமம் முழுதும் பகுத்தறிவு ஒளி பெற்றுத் திகழவும், பாடுபட்டவர்—எனது அருமைச் சகோதரன் அவர்கள்!

இப்படிப்பட்ட தூயவர்—தொண்டு மனப்பான்மை உள்ளவர்—இனிய உள்ளமபடைத்தவர் திடீரென்று இறந்துபட்டார் என்றால் தாங்கிக்கொள்ளக் கூடிய செய்தியா என்ன? மீளாத சோகம் கொண்டேன். துயரக் கடலில் தத்தளித்தான்! தோழர்கள் தேற்றியும் தெளிவு பெற முடியவில்லை!

சரியாக இருபது நாட்கள் நல்லபடி உணவு அருந்த முடியவில்லை. தினசரி அலுவல்களை மறந்தேன். செய்தித் தாள்கள் பார்த்தறியவில்லை. கழக இதழ்களை வாசிக்கவில்லை. கடிதங்கள் உடைக்கப்படாமல் கிடந்தன. இப்படி இருபது நாட்கள்.

கடைசியில் எப்படியோ ஒருவாறு தேறினேன். அலுவல்களைப்பார்க்கமுற்பட்டேன். எனது மேஜையை முதல்முதலில்பார்த்தபோது இதழகளும், கடிதங்களும் நிறைந்துகாணப்பட்டன. முதலில் கடிதங்களைப்படித்து ஒதுக்கிவிடுவது என்று தீர்மானித்தேன்.

ஒரு 'கவரை' உடைத்தேன். உள்ளே "திருமண அழைப்பிதழ்" ஒன்று இருந்தது. திருவாளர் ச

திரனுக்கு திருமதி சந்திராவை திருமணம் செய்ய விருப்பதாக அதில் இருந்தது!

சந்திரன் — சந்திரா நல்ல பெயர்ப் பொருத்தம் என்பீர்கள்! பெயரில் மாத்திரமல்ல; ஜோடிப் பொருத்தமும் அப்படித்தான். நானும், சந்திரனும் கல்லூரியில் ஒரே வகுப்பில் பயின்று வருபவர்கள். சந்திரன், சந்திராமீது காதல் கொண்டலைந்தது அநேகமாக எல்லோருக்கும் தெரிரிம். கிளியோவின் காதலனாக சந்திரன் விளங்கினான். சந்திராவோ அவனை 'அந்தோனி' யாகவே பாவித்துவந்தாள். ஆனால் ஒரே ஒருகுறை! சந்திரன் ஏழை என்பதுதான். இதனால்தான் சந்திரனுக்கு, படித்துக்கொண்டிருக்கும் போதே கலியாணம் செய்துவிட வேண்டும் என்று அவன் பெற்றோர்கள் விரும்பினாலும் காலதாமதமாயிற்று.

எப்படியோ காரியம் முடிந்திருக்கிறது என்பதைத் 'திருமண அழைப்பிதழ்' காட்டுகிறது. அழைபபிதழோடு ஒரு கடிதமும் இருந்தது. அதில் "என் இலட்சியக் காதல் நிறைவேறுமா என்று சந்தேகித்துக்கிடந்தேன். இப்போது உறுதியாகிவிட்டது. எனவே என் உள்ளம் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது. இம் மகிழ்ச்சியில் கலந்துகொள்ள ஓடோடியும் வந்துவிடு......" என எழுதியிருந்தான்!

மகிழ்ச்சி என்கிறான் நண்பன், மகிழ்ச்சியின் விளைவு அவனது பரமபரை வளர்ச்சியுறுவதற்கு வித்தாகிறது! ஆம்! இவர்கள் சந்ததியை உண்டாக்கத் தயாராகிவிட்டார்கள்!

நள்ளிரவில் கொட்டுச் சத்தம் கேட்டது. எண்ணம் விடுபட்டுவிட்டது. ஏன மேளச் சத்தம் எனப் பார்க்க வெளியே வந்தேன். மொட்டை மாடியில் நின்று கீழே கவனித்தேன். ஒரு சிறு ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. அது ஒரு 'சடங்கு' ஊர்வலம்!

எங்களூர் ஏகாம்பர நாடார் மகள் பூபபெய்தியமைக்காக நடத்தப்படும சடங்கு அது. ஏராளமான பெண்கள் தாமபாளத்தில் சேலை, பழங்கள் ஏந்தியபடி சென்றார்கள். பலர் வெள்ளி, பித்தளை பாத்திரங்களைச் சீதனமாக்கச் சென்றார்கள்!

எல்லோருக்கும் முன்னால் முன்றாப்பிள்ளைப் பையன் பட்டாத் துண்டு போட்டுக்கொண்டு கம்பீரமாகச் சென்றுகொண்டிருந்தான். தனது முறைப் பெண்ணிற்கு சீதனமாகப் பெரிய கொம்புக்கிடாய் ஒன்றைக் கையில் பிடித்திருந்தான்! குழலோசை 'ஆலாபனை'யால் ஊரையே அலறச் செய்தது. மேளகாரன் தகுந்தபடி கொட்டித் தள்ளினான். ஊர்வலம் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருந்தது.

கூட்டத்தினர் எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி ரேகை படர்ந்திருந்தது. தரித்திரர்கள் பலர் ஊர்வலத்தில் வந்தாலும் அந்நேரம் சந்தோஷத்தோடுதான் தென்பட்டார்கள்!

ஊர்வலம் கண்பார்வையினின்றும் மறைந்துவிட்ட பின் மேடையின உள் அறைக்குள் நுழைந்தேன். நான் நுழைந்ததுதான் தாமதம் யாரோ கதவைத்தட்டிக் கூப்பிடும் சப்தம் கேட்டது.

"யார் அது?" என்றேன்.

"நான்தான் அருணாசலம்" பதில் குரல்.

"அண்ணாச்சியா... என்ன இந்த நேரத்தில் கதவைத் தட்டுகிறீர்கள்!"

"ஒன்றுமில்லை! ஒரு நல்ல சேதி..."

"என்ன அப்படிச் செய்தி?"

"என் மனைவி குழந்தை பெற்றிருக்கிறாள்"

"அப்படியா...... மகிழ்ச்சி. குழந்தை ஆணா, பெண்ணா..."

"ஆண் குழந்தை"

"அபபோ மகிழ்ச்சிதான்"

"வந்து... அவளுக்குக் கொஞ்சம் மருந்து தயார் செய்து கொடுக்க வேண்டியதிருக்கிறது. கொஞ்சம் இஞ்சி தேவை. இருந்தால் கொடேன்."

"இதோ... தருகிறேன்."

வீட்டிற்குள் சென்று தேடியலைந்து அதை எடுத்துக்கொடுத்தேன. அவருமபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

மீண்டும் இருப்பிடம் வந்து சேர்ந்தேன். அடுத்தடுத்து நடந்த மூன்று சம்பவங்களும் எண்ணத்திற்கு வேலை கொடுக்கலாயின. சிந்திக்க, சிந்திக்க இச்சம்பவங்களுக்கும், உலக இயல்புக்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோல் தென்படுகிறது!

உண்மைதான்! நானோ அண்ணன் மறைவிற்காக அழுது கலங்கிப்போய் இருக்கிறேன். துக்ககரமான நிகழ்ச்சி!

திருமண அழைப்பிதழோ வா... வா...திருமண விழாவில் கலந்துகொள், மகிழ்ச்சியில் பங்குகொள்ளவா...எனப் பறையறைவதுபோல் இருக்கிறது, இங்கே மகிழ்ச்சி!

சடங்கும் அப்படித்தான்! தன் மகள் பூப்பெய்திவிட்டாள் என்பதிலேதான் என்ன பூரிப்பு பெற்றோர்களுக்கும், உற்றார்களுக்கும், இங்கும் மகிழ்ச்சிகரமான செய்தியே!

குழந்தை பிறந்ததினாலே களிப்படைகிறான் தகப்பன். எதிர்கால வாரிசு கிடைத்துவிட்டதே என்பதிலே அவன் காணும் களிப்புத்தான் என்னே! மங்களமான சூழ்நிலை இங்கும்!

நான் வசிக்கும் அதே ஊரில் அடுத்தடுத்து இதே சம்பவங்கள்! "நீ அண்ணனை இழந்து தவித்தால் என்ன? நீ துக்கத்தில் ஆழ்ந்திருந்தால் என்ன? உனக்காக ஊரே உன்னோடு சேர்ந்து எப்பொழுதும் அழுதுவிடுமா? போடா! பைத்தியம்! நீ எப்படிக் கிடந்தால் என்ன? உன்னோடு எல்லாம் அடங்கிவிடாது! இதோ பார் உன் நண்பனின் திருமணம்! இங்கேபார் சடங்கு ஊர்வலத்தை! குழந்தை பிறந்த மகிழ்ச்சியைப் பார்! நீ முடங்கிகிடட்டுக்கொண்டு இருந்தாலும் இவைகளெல்லாம் வந்துகொண்டும், போய்க்கொண்டும்தான் இருக்கும்! 'இதுதான் உலகம்' உணர்ந்துகொள்ளப்பா நீ" என்று இவைகள் எனக்குப் பாடம் புகட்டும் வகையில் இருந்தன.

சிந்தனையினின்றும் விழித்துக் கொண்டேன். இரண்டாண்டுகட்கு முன் நடந்த சம்பவத்தின் கோவையாக இது இருப்பினும் அதில் ஒரு சிறந்த தத்துவமே பொதிந்திருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

★

# இராமன் ராஜினாமா!

[ தி. மு. க.வின் தொண்டர்படை வரிசையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, உற்சாகப் பணிபுரியும் ஆர்வக்காளை தோழர் வி. பி. இராமன் சட்ட நிபுணர். "பார்ப்பனீயத்தை" விடாது நிலைநாட்ட போராடும் உயர் சாதியினர் என்போரின் மத்தியிலிருந்து கழகத்துக்குக் கிடைத்த நல்ல நண்பர்.

அவர், சட்டக் கல்லூரியின் ஒய்வு நேர விரிவுரையாளராக இருந்தார். கழகத்திலும், 'ஹோம்லேண்ட்' இதழிலும், அவர் கொள்ளும் ஈடுபாடுகளைக் கண்டு மனம் பொறாத அரசு, புதுக் கட்டளை பிறப்பித்தது.

கொள்கைக்காக, பதவியை உதறிட முன் வந்து, அரசுக்கு அனுப்பிய அவரது கடிதம் கீழே. உறுதி கொண்ட இராமனைப் பாராட்டுகிறோம். ]

❋

திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் நீங்காத பற்றும், அதன் வளர்ச்சியிலே பெரும் அக்கறையும் கொண்டோரில் வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்களும் ஒருவர். கழகநடவடிக்கைகளில் இடையருது ஈடுபட்டு, பாடுபட்டு வருபவர் அவர்.

அவர் திறமை மிக்க வழக்கறிஞர் என்பதோடு, சென்னை சட்டக் கல்லூரியிலும் பகுதி நேர விரிவுரையாளராகப் பதவி வகித்துவந்தார்.

"தோழர் இராமன் அவர்கள் இயக்கத்திலே பேரார்வத்துடன் பணிபுரிவது சிலருக்கு வியப்பாக இருக்கலாம். அவர் ஒரு 'பிராமணர்' என்ற காரணத்தால்! ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'பிராமணீயம் மட்டுமே ஒழியவேண்டும்' என்ற கொள்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர் விளங்குகிறார். ஆகவேதான் உங்களால் பாராட்டப்படுகிறார்..."

—என்ற பொருள்பட திருவாரூரில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட மூன்றாவது மாநாட்டிலே தலைமை வகித்த தோழர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளிக்கும் பாணியில் தோழர் இராமன் அவர்கள் "நான் ஒரு பிராமணனல்ல; திராவிடன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைபவன்!" என்று சொன்னார்.

ஆனால் ஆட்சியினர் பொதுப்பணியிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு வழக்கம் போல் தந்துவருகின்ற தொல்லைகளை தோழர் இராமன் அவர்களுக்கும் தரத் துவங்கினர்.

ஆகவே, வழக்கத்திற்கு மாருக சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களின் அரசியல் ஈடுபாட்டு உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் புதிய புதிய விதிகளைக் கொணர்ந்தனர். தோழர் இராமன் அவர்கள் ஒன்று அரசியலைக் கைவிட்டுவிட வேண்டும்; அல்லது சட்டக் கல்லூரிப் பதவியை விட்டுவிட வேண்டும் என்ற இக்கட்டான நிலைக்குத் துரத்தப்பட்டார்.

இறுதியில் அவர் சென்ற 12-7-58 அன்று. தன்னுடைய சட்டக் கல்லூரிப் பதவியை ராஜினமா செய்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது! அந்த ராஜினமாவுக்குப் பின்னல் மறைந்து கிடக்கும் அவரது தொண்டுள்ளமும், ஆட்சியினரது கோணல் போக்கும் நாட்டுக்குப் புரிந்தது.

பகுதி நேர விரிவுரையாளர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற வாதம் முரணனது என்பதற்கு ஆயிரமாயிரம் ஆதாரங்களை எடுத்துக் காட்ட முடியும்! எத்தனையோ அரசியல் தலைவர்கள் சட்டக் கல்லூரியின் போதகர்களாக இருந்திருக்கிறார்கள்!

○ இன்று இந்தியக் குடியரசுத் தலைவராக இருக்கின்ற இராசேந்திர பிரசாத்திற்கு ஒரு காலத்தில் கல்கத்தா சட்டக் கல்லூரி இடம் கொடுத்திருக்கிறது!

சென்னை சட்டக் கல்லூரியில் பணியாற்றிய எவ்வளவோ பேர் வெறும் ஆசிரியர்களாகமட்டுமல்ல; அரசியல் மேதைகளாக — ஆட்சியிலே பங்கு கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

○ வி. கிருஷ்ணசாமி ஐயர் (1892—95) பி. என். சிவசாமி ஐயர் (1893—99) — ஆகியோர் சட்டக் கல்லூரி பணியாளர்கள்தான்—ஆனாலும் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்கள் என்ற அளவில்தான் நாடு நன்கு அறிந்திருந்தது அப்போது!

○ எஸ். துரைசாமி (1916-20) யின் அரசியல் நடவடிக்கைகளை யாரும் மறந்திருக்க முடியாது—அவர் ஒரு தீவிர காங்கிரஸ்காரர்!

○ நீதிக் கட்சியின் பிரபல தலைவராக இருந்த மதனகோபால்நாயுடு, 1921-ம் ஆண்டில் சட்டக் கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளராக பணி புரிந்திருக்கிறார்.

○ என். சிவராஜ், லக்கப்பராய்—ஆகியோர் சட்டக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் தேர்தலிலும் போட்டியிட்டிருக்கிறார்கள், நீதிக் கட்சியின் சார்பில்!

○ வடாற்காடு மாவட்டத்தின் காங்கிரஸ் கட்சியின் வலுவுள்ள தூணாக விளங்கிய வி. எம். இராமசாமி முதலியாரும் பகுதி நேர விரிவுரையாளர் பதவி வகித்தவர்தான் 1925-முதல் 31-வரை!

அப்போதெல்லாம் இல்லாத சட்டம்—ஜனநாயகம் பேசுகின்ற காங்கிரஸ் சர்க்காரால் இன்று பிரயோகிக்கப்படுகிறது என்றால் அதன் உட்பொருள் என்ன? எதிர்க் கட்சிகளுக்கு இருக்கின்ற செல்வாக்கைக் குறைக்க வேண்டும்; அவைகளில் ஈடுபாடு கொண்டிருப்போரின் ஆர்வத்துக்கு உலைவைக்கவேண்டும் — என்பதைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

அந்தத் தீய எண்ணத்திற்குப் பலியாகாத தோழர் இராமன் தனது இராஜினமா கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்:

1957, செப்டம்பர் 9-தேதியிட்ட உத்தரவு ஒன்றின் மூலம், சென்னை சர்க்கார், என்னை சட்டக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராக நியமித்தது. அந்தத் தேதிக்கு முன் கூட, 1956-பிப்ரவரி முதல் தேதியிலிருந்து அவ்வப்போது, அந்தப் பதவியைத் தற்காலிகமாக வகித்து வந்திருக்கிறேன். மேலும், பொதுப் பணித் தேர்வுக்குழுவும் என்னைத் தேர்ந்தெடுத்திருந்தது.

பொது விவகாரங்களில் நான் மிகுந்த ஆர்வம் காட்டி வந்திருக்கிறேன். சர்க்கார் என்னை விரிவுரையாளராக நியமித்தபோது. எனது பொது வாழ்வு பற்றி அறிந்தே இருக்கவேண்டும்.

நான் பதவியை ஒப்புக்கொண்ட போது, பதவிப் பெயர் குறிப்பிடு

வதுபோல, அது ஒரு பகுதிநேரப் பணி என்ற உண்மையான முழு நம்பிக்கையில்தான் ஒப்புக்கொண்டேன். இங்கும் மற்றும் இதர சட்டக் கல்லூரிகளிலும் உள்ள பகுதி நேர விரிவுரையாளர்கள், நெடுங்காலமாகக் கல்லூரிக்கு வெளியே அனுபவித்து வருகிற சுதந்தரம் நமக்கும் தரப்படும் என்ற நோக்குடன்தான் பதவியை ஒப்புக்கொண்டேன். சட்டக்கல்லூரிகளில் பகுதி நேர விரிவுரையாளர்களாயிருந்தவர்கள், இதர துறைகளிலும் நாட்டுக்குச் சேவை செய்திருக்கின்றனர்.

எனவே, கடந்த மார்ச்சு திங்கள் 14-ந்தேதி யன்று, சட்டக் கல்விக்கான இயக்குநர் என்னை அழைத்து, ஒரு பகுதி நேர விரிவுரையாளர் அரசியலில் தீவிர ஈடுபாடு கொள்வது நல்லதல்ல என்று தெரிவித்தபோது, நான் ஆச்சரியமடைந்தேன், ஒரு பகுதி நேர விரிவுரையாளருக்கு உள்ள சட்டபூர்வமான உரிமைகள் பற்றியும், எதிர்கால, அரசியல் வாழ்வுபற்றியும் தீர ஆராய்ந்தேன்; சர்க்கார் ஊழியருக்கான நடத்தை விதிகளை ஆராய்ந்தபோது முழுநேர சர்க்கார் ஊழியர்களுக்கு விதிக்கப்படும் எந்தக் கட்டுபாடுகளுக்கும் நான் உட்படுத்தப்பட முடியாது என்பதைத் தெளிவாக உணர முடிந்தது.

உதறிவிட நான் முடிவு செய்துவிட்ட சம்பளமோ, அல்லது உத்தியோகமோ என்னை நான் விரும்பும் வழி நடப்பதிலிருந்து விலக்கிவிட முடியாது; திருத்தங்களைச் செய்ததின் மூலம், சர்க்கார் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நான் நடப்பேன் என்று சர்க்கார் எதிர்பார்த்திருக்குமானால், அது தவறாகும். எனது கட்சியிடம் நான் கொண்டுள்ள பிடிப்பை, அது தவறாக மதிப்பதாகும். செய்யப்பட்டுள்ள திருத்தம், மாநிலத்தில் பகுதி நேர ஊழியத்தின் தன்மையில் சட்ட விரோதமாக இல்லாவிடினும், அநியாயமாகச் செய்யப்படும் மாற்றம் என்பதையும் நான் குறிப்பிடாமலிருக்க முடியாது. மேலும் எனது அரசியல், ஆளும் கட்சிக்கு விரோதமானதாயிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக சர்க்கார் எனது அரசியலைக் கட்டுப்படுத்த நினைத்து, விதிகளைத் திருத்தும் அளவு நடவடிக்கை எடுத்ததானது மிக வருத்தப்படவேண்டியதொன்றாகும். இந்த அரசியல் நோக்கத்தோடு, விதிகளைத் திருத்த சர்க்கார் முற்பட்டதானது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்."

*

*4-ம் பக்கத் தொடர்ச்சி*

—என்று கேட்டால், பதிலளிக்க முன் வருகிறார்—வடக்கு ஒன்றும் வாழ்ந்துவிடவில்லையாம். தென்னாட்டில் வளம் பெருகியுள்ளதாம். நேருவின் மாகாணமான ஐக்கிய மாகாணத்தில் எதுவும் கிடையாதாம்! வக்கீலாகி, பதில் அளிக்க முன்வருகிறார்! நிரூபித்தால், பொதுவாழ்விலிருந்தே விலகி விடுகிறேன் என்கிறார்!!

•

வைர அட்டிகை இருக்கிறதோ இல்லையோ, மானேஜர், மானேஜர்தான்! அதுபோல, தென்னாட்டை விட ஐக்கிய மாகாணமும் ஏனைய பகுதிகளும் முன்னேறியிருக்கின்றனவோ இல்லையோ, அவைகள்தான் நமக்கு எஜமானர்!!

**இதனை, இல்லையென்று மறுக்க முடியுமா நிதியமைச்சரால்.**

சின்னஞ்சிறு நாடு இலங்கை—சென்ற ஆண்டு வெளி நாடுகளுடன் வாணிபம் நடாத்தியதில் 2-கோடி ரூபாய் இலாபம் பெற்றோம் என்று அறிவிக்கிறது.

2-கோடியா! பூ!!—எனலாம், நிதியமைச்சர். ஆனால், ஏதாவது ஒரு வெளிநாட்டுடன் ஒருபடி மிளகைவிற்று, இரண்டு ரூபாய் சம்பாதிக்கும் அதிகாரம் உண்டா இவருக்கு? அது இருக்கட்டும், செல்லுமிடந்தோறும், இங்கே இந்த ஆலைகளை அமைக்கலாம் அங்கே அந்த ஆலைகளைக் கட்டலாம் என்கிறாரே, யாராவது முன் வந்து ஒரு ஆலை கட்டலாம் என்றால் உடனே அனுமதிக்க அதிகாரம் உண்டா இவருக்கு? போகட்டும், சதாரண தபால் தலைகளில், வள்ளுவரையும் பாரதியையும் பொறிக்கும்படி விரும்பினால், செய்யமுடியுமா இவரால்? நயா பைசா வந்ததே, அதன் பெயர் அப்படியிருக்கக் கூடாது என்று இவரால் அடித்துச் சொல்ல முடிந்ததா? எல்லாக் கட்சியினரும் சேர்ந்து கேட்டார்களே, சென்னை மாநிலத்துக்கு, 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமென்று, செய்ய முடிந்ததா இவரால்?

என்ன அதிகாரம் இருக்கிறது இவரிடம்—ஏதாவது ஒரு சட்டம் செய்தாலும், அதற்கு கவர்னர் அங்கீகாரம் வேண்டும்—கவர்னரோ, டில்லியின் தூதுவர்—டில்லியோ, அரசியல் சட்டமூலம், மாகாணங்களை எடுபிடியாக்கி வைத்திருக்கிறது—இப்படிப்பட்ட நிலையில், வடக்கு எங்கே தெற்கை வஞ்சிக்கிறது, தெற்குத்தான் சுகமாக வாழ்கிறது என்கிறார்!!

**வஞ்சிப்பது** என்பதற்கு, பல விளக்கங்கள் தரலாம்.

**சுகமாக** வாழ்வது என்பதற்கும், பொருள் பல உண்டு.

கூண்டிலேயிருக்கிறது, கிளி! தங்கத்தாலான கூண்டு—வேளா வேளைக்கு விதவிதமான கனிகளை வைக்கிறான் — நிமிடத்துக்கொருதரம் போய் கொஞ்சுகிறான்—கிளியைச் சுகமாக வைத்திருக்கிறேன், பட்டு மெத்தை, பழவகை, கிரீச் சென்றால் ஓடுவேன், கவனிப்பேன், எவ்வளவு சுகமாகயிருக்கிறது தெரியுமா—என்று சொல்லலாம்! கிளிக்கு, அதுவா சுகம்? என்பதை உணர்ந்து, திறந்து விட்டாலும் ஓடாமலிருந்தால், அப்போது சொல்லலாம்! அதை விட்டு, நாமே சொல்லுவதால், கிளி சுகம் அடைவதாகவா எண்ண முடியும்!!

நாம் 'சுகம்' என்று கருதுவது, கிளிக்கு வேதனையாக இருக்கலாம். அதேபோல, அமைச்சர் சுப்ரமணியம், "முன்னேற்றம்" அடைந்து இருப்பதாகக் கருதுவது, அவருடைய தரத்துக்கும் திறமைக்கும் வேண்டுமானால் உயர்ந்ததாக இருக்கலாமே ஒழிய, விடுதலை விரும்பும் நாம் எப்படி ஏற்க முடியும்? ரோமாபுரிக்கும் கிரேக்கத்துக்கும் முத்தையும் பட்டையும் அனுப்பிய தமிழகத்தை நாம் பார்க்கிறோம்! இன்றுள்ள ஐக்கிய மாகாணமும், ஏனைய பகுதிகளும் 'இந்தி' எனும் ஒரு மொழியைப் பெற்றிலாத காலத்திலேயே, ஏற்றமும் எழிலும் இலக்கண அமைப்பும் நிரம்பி வழிந்த தமிழினைக்கொண்டிருந்த தாயகத்தைப் பார்க்கிறோம்! அந்தப் பழம் பெரும் நிலை, மீண்டும் வரவேண்டுமெனத் துடிக்கிறோம். நமது கனவு பெரிது! சுப்ரமணியனாருக்கு இக்கனவிலுள்ள அருமை புரியாது; எனவே, அவர் 'கடுகு' கிடைத்தாலும், களிப்பு அடைய முடியும்!! ஆனால், அதையே "அளவுகோலாக" வைத்து, புத்தி மதிகூறக் கிளம்பலாமா? கிளம்பினும்தான், கேட்பார் எவர்!!

வடக்கு எங்கே வஞ்சிக்கிறது—வஞ்சித்தால், நேருவின் ஐக்கிய மாகாணம் சிறந்து விளங்கவேண்

டுமே?-என்று கேட்கிருர், அமைச்சர். ஐயோ, பாவம்! காங்கிரஸ் கட்சியில், சகலவிபரமும் தெரியக்கூடிய இடத்திலிருப்பவர் என்று எண்ணியிருந்தோம் — அது கூட இல்லை, என்று தெரிகிறது!!

**இன்றுள்ள அகில இந்திய காங்கிரசையே, ஆட்டிப்படைப்பதும், இந்தி விஷயத்தில் வெறித்தனமாகயிருந்து படாத பாடுபடுத்துவதும் ஐக்கிய மாகாணம்தான்.**

அதனுல், ஐக்கிய மாகாணம், "முன்னேறிவிட்ட" மாகாணம் என்று சொல்லிவிடமுடியுமோ, என்று வாதாட முன்வரலாம் தோழர் சுப்ரமணியம். "முன்னேற்றம்" என்பதற்குள்ள அரிச்சுவடியைக்கொஞ்சம அவர் உணர வேண்டும்.

எது முன்னேற்றம்?--இங்கிலாந்தை முன்னேறியநாடு என்கிறோம்! ஏன்? எதனையும் பெறும செல்வாக்குடன் இருப்பதால்! அங்குள்ள மக்களுக்கு எதனையும் அடையக்கூடிய வாய்ப்பு இருபபதால்!! இந்தச்செல்வாக்கு இருந்திடின், பிறகென்ன கவலை, இந்தியாவைக் கேட்டால் கோதுமை அனுப்புகிறது, எகிப்தைக்கேட்டால் பருத்தியை அனுப்புகிறது, இனனொரு நாட்டைக்கேட்டால் இரும்பைத் தருகிறது, இப்படித் தனது செல்வாக்கைவைத்தே சகல முன்னேற்றத்தையும் பெற்றுவிட முடியும் அதனுல்! இந்தச் சூழ்நிலையில், செல்வாக்கு, அந்த நாட்டுக்கு வாய்க்காலாய் விடுகிறது. அதன் மூலம், பல முன்னேற்றவழிகளையும் அதனுல் தேடிக்கொள்ள இயலுகிறது.

அப்படிப்பட்டசெல்வாக்கு, ஐக்கிய மாகாணத்துக்குச்சரி, வடக்கிலிருக்கும் வேறு மாகாணங்களுக்குக்கும்சரி நிரம்ப இருக்கிறது.

"சரி! அந்தச் செல்வாக்கால், வடக்கு என்ன சாதித்துவிட்டது. என்ன ஓரவஞ்சனை செய்துவிட்டது. என்ன நன்மைகளைத் தேடிக்கொண்டுவிட்டது?"

என்று கேட்கலாம்! அதைத்தான், கேட்கிருர் சுப்ரமணியம்!

**செல்வாக்கைத் தன் வசம் திரட்டிக் கொண்டிருப்பதே, முதல் வஞ்சனை என்போம்**

**டில்லி தன் வசம் அதிகாரங்களையும், அந்த அதிகாரத்தை உபயோகிக்கும் அனைவரையும் வடவர்களாக வைத்திருப்பதே ஓர வஞ்சனை என்போம்,**

வடக்கு வாழ்கிறது! எப்படி? எப்படி?

மொழியில்
அரசு அதிகாரத்தில்
வாணிபத்தில்

இவை, நாம் தரும் பொதுக் காரணங்கள்! இவைகளைச் சொல்லும்போது, இதற்கான அதிகாரங்களைச் சுமக்கும் டில்லியையே குற்றம் சாட்டுகிறோம். இந்த அதிகாரங்கள் யாவும், தெற்குக்கு நிச்சயம் கிடையாது— இவை நமக்கு இருந்தால், மிகமிக நல்லது, நமது காரியங்களை நாமே கவனித்துக்கொள்ள இயலும் என்பதால் கேட்கிறோம்.

வடக்கு, எப்படி வாழ்கிறது என்று பிரித்துப் பிரித்துப பார்த்தால், இந்த ஒரு இதழ் போதாது விளக்க.

எத்தனை அணைக்கட்டுகள்?
அவை எங்கெங்கே?
எத்தனை ஆலைகள்?
அவை எங்கெங்கே?
எத்தனை கோடி ரூபாய்கள்?
அவை எங்கெங்கே?

என்பதுபற்றி, நாம் இதுவரை தந்திருக்கும் பட்டியல்களைப் படித்துப் பார்க்கட்டும், அமைச்சர்! ஓமந்தூரார் ஆட்சிக் காலத்தில், கோதுமை வரவழைத்தோம் ஐக்கிய மாகாணத்திலிருந்து. நம்மிடமிருந்து ஐக்கியமாகாணம் அதிகவிலை பெற்றது அநேகருக்கு நினைவிருக்கலாம்! அதற்கு வஞ்சனை என்று பொருளில்லையா?

சராசரி வடக்கே வாழ்வோரின் வருமானத்தையும், தெற்கே வாழ்வோரின் வருமானத்தையும் அமைச்சர் புள்ளி விபரம் கேட்டுத் தரட்டும்.

தானே, புரிந்து கொள்வார்கள், எந்தப் பகுதி பொருளாதாரத்தில் நன்கு உள்ளது என்று!

வடக்கு எங்கே வாழ்கிறது? பம்பாய், வங்காளத்தைவிட, ஏனைய மாகாணங்களெல்லாம் நம்மைவிடத் தாழ்ந்துதான் உள்ளன, என்ருர். அவைகளுக்கு வாதாடும் வக்கிலாகிருரே, இவர் முதலில் இவைகளுக்குப் பதில் சொல்லட்டும்.

பலகோடி ரூபாய் செலவு செய்து அமைக்கப்பட்ட புதிய தலைநகர் சந்திகார் எங்கே உள்ளது?

ஹிராகுட்டும், தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு தேக்கமும் எங்கெங்கே இருப்பவை?

ரூர்கலா, பிலாய் எங்கே இருக்கின்றன?

அமைச்சர், இந்த இரண்டொரு உதாரணங்களுக்கு முதலில் பதில் சொல்லட்டும். இந்தப் பத்தாண்டுகளில் செலவாகியிருக்கிறதே,

**கிட்டத்தட்ட 5000 கோடிக்குமேல் அதில் தெற்குக்குக் கிடைத்த பங்கென்ன?**

என்கிற விபரத்தையும், தரட்டும். அப்போது புரியும், வடக்கு

**அரசியல் அதிகாரம்**
**வாணிப ஆதிக்கம்**
**மொழி ஏகாதிபத்யம்**

இத்துறைகளில் மட்டுமின்றி, தென்னாட்டினை,

**தொழில் துறையில்**
**பாசனத் துறையில்**

எவ்வளவு வஞ்சித்திருக்கிறது என்கிற உண்மை! மக்கள் மத்தியில் சவால்விடுவதன் மூலம் உண்மைகளை மறைத்துவிட முடியாது.

சுப்ரமணியம் மட்டுமல்ல,
அரசியலறிந்தவர்கள்
நிபுணர்கள்
தொழில் துறையினர்.

அனைவருமே, வடக்கால் வஞ்சிக்கப்படுகிறது தெற்கு என்பதை, அடிக்கடி எடுத்துப் பேசி வருகின்றனர். இருந்தும், வக்கிலாகிருர் நிதியமைச்சர்! வாதியாக ஒரு சமயம்—சாட்சியாக இன்னொரு சமயம், செச்சேச்சே, இந்த உருமாற்றம் யாருக்கும் நல்லதல்ல!! ஏமாளியாகக்கூட இருக்கலாம், சுயநலத்துக்காக, எத்தனுகக் கூடாது — அறநெறியாகாது — என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு,

"வடக்கு வாழவில்லை
தெற்கு வாழ்கிறது"

எனும் தலைப்பில், வாதிட அவர் முன்வருவதென்ருல், நாம் தயார் என்று அழைக்கிறோம்! அவர், பொது வாழ்வைவிட்டுப் போக வேண்டும் என்று நாம் நிச்சயம் கட்டாயப்படுத்த மாட்டோம் என்கிற உறுதியினைத் தந்தே அழைக்கிறோம்!!



# உலக அரங்கில்

எங்கும் ஒரே பரபரப்பு — அங்கேரிய நாகியை, ருசியக் கம்யூனிசம் தூக்கிட்டுக் கொன்றது பற்றிய கண்டனக் குரல் அமுங்கிவிட்டது. ருசியாவின் போக்குப் பற்றி ஆட்சேபித்து, இத்தனை நாளும் சமாதானக் கவுன்சிலின் உறுப்பினராக இருந்த தத்துவ மேதை அறிஞர் பெட்ரண்ட் ரசல் ராஜினாமா செய்ததுகூட உலகுக்குத் தெரியவில்லை — அந்தளவுக்கு எங்கும் பேச்சு! இன்னொரு போர் மூளுமோ — வந்தால் அடிக்கலாம் இலாபக்கொள்ளை என்று பலர் நாக்கை சப்புக் கொட்டவும், "ஐயோ, இன்னொரு போரா?", என்று மக்கள் அலறவுமான வகையில், இந்தக் கிழமை உலக அரங்கம், ஆடிக் கொண்டிருக்கிறது.

*

ஈராக் புரட்சியையொட்டி மத்திய கிழக்கில், அமெரிக்காவும் பிரிட்டனும் படைகளைக் கொண்டுபோய் வைத்துள்ளன. இதைக் கண்ட எகிப்து நாசர், ருசியாவுக்கு ஓடிக் குருசேவுடன் ஆலோசனைகள் நடத்திவிட்டு வந்துள்ளார். மேற்கு வல்லரசுகளின் படைகள் பீரங்கியைத் திறந்தால், தனது பீரங்கிகளும் பதிலளிக்கத் தயங்காது'— என்று ருசியா எச்சரிக்கை விட்டிருக்கிறது. அதோடு தன்னிடம் அணுகுண்டுகள் மட்டுமின்றி, சகலத்தையும் சாம்பலாக்கும் கிருமிக்குண்டு இருப்பதாகவும், கபர்தார்! — எனவும் ருசியா மேற்கு வல்லரசுகளுக்கு எழுதியிருக்கிறது.

*

போர் ஏற்பட வேண்டும்!— என்கிற ஆசை ஆதிக்கக்காரர்களுக்கு இருந்தாலும், அந்தப் போரின் விளைவாக இருதரப்பினரும் அணுகுண்டுகளை வீசிக் கொள்ள நேர்ந்தால் கதியென்னவாகுமா? என்கிற அச்சமும் இல்லாமலில்லை. இருந்தாலும், உலகைமிரட்ட, இது போன்ற பயமுறுத்தல்களை செய்துகொண்டுள்ளனர். சூயஸ் கால்வாய் தகராறில் நடுநிலைமை வகிப்பது போல் நடித்து தன்னைக் காப்பாற்றிக் கொண்ட அமெரிக்கா' இப்போது பெருந் தவறு செய்துவிட்டது! ஜோர்டானுக்கும் லெபனானுக்கும் தனது படைகளை அனுப்பியது மிகத்தவறாகும்!! அமெரிக்கா, ருசியா மீதுள்ள எரிச்சலையும், நாசர்மீதுளள ஆத்திரத்தையும் காட்டிக்கொள்ள உற்பத்தி செய்த "கெடுபிடிப் போராகும்", இது.

*

இரண்டு மன்னர்கள் தோள் தட்டிக்கொண்டு, ரதகஜதுரக பதாதிகளுடன் மோதிக் கொள்ளுமபோது, நஷ்டப்படுவது, எது? அழகாக தாகூர் சொல்லியிருக்கிறார், இருதரப்புப்படைகளும் போரிடுகின்றனவே, அந்த மைதானத்தில் இருக்கும் "புல்" இரண்டுக்குமிடையிலே மாட்டிக் கொண்டு சாகிறது என்று! அதைப்போல் இவர்கள் அட்டகாசததுக்கு, மத்யகிழக்கிலுள்ள மக்கள் இரையாகநேருகிறது. இதற்குக் காரணமான அமெரிக்காவை, மத்யகிழக்கு மக்கள் சுலபத்தில் மன்னிக்க மாட்டார்கள்.

*

ரசமான செய்தி! இப்படி அமெரிக்காவுமநாசருமமோதிக் கொண்டுளளார்கள் அல்லவா? இதே சமயத்தில் எட்டுக் கோடி ரூபாய்க்கு, ஒரு காண்டிராக்டை ஏற்றுக்கொணடுள்ளது அமெரிக்கக் கம்பெனி ஒன்று! சூயஸ் கால்வாயை ஆழமாகவும், விரிவாகவும் ஆக்கும எகிப்து சர்க்காரின் திட்டத்துக்குத்தான் இந்த 'காண்ட்ராக்ட்'

*

விரைவில் ஒரு மாநாடு கூட்டி அதில் உட்கார்ந்து விவாதிப்போம் என்று மேற்கு வல்லரசுகளுக்கு குருசேவ் கடிதங்கள் எழுதியுள்ளார். இதற்கு இன்னும் சரியானபதில்கள் கிடைக்கவில்லை. இம் மாநாட்டில் நேருவையும் அழைக்குமாறு சொல்லியுள்ளார்! இப்படி உட்கார்ந்து, எல்லா உலகத் தலைவர்களும், மனம்விட்டுப் பேசினால், அபாயம் நீங்கும் அறிகுறி ஏற்படலாம் — ஓரளவுக்கு ஆபத்து நீங்கலாம். நேரு சமரச நிலையிலிருப்பதாகக் கருதப் படுகிறவர். ஆனால் பாகிஸ்தான் ஒத்துக்கொள்ள வேண்டுமே! பக்கத்து நாட்டிலிருக்கும் நேரு, இன்னும் தங்களைப் பயமுறுத்தி வருவதாக, பாகிஸ்தான் சொல்லிக்கொண்டிருக்கிறதே!!

*

"அங்கேரிய உள்நாட்டு விவகாரத்தில் மட்டும் எப்படி ரஷ்யா தன்படைகளை அனுப்பலாம்? அதுபோலத்தான் எங்களுக்கு வேண்டிய நாட்டுக்கு எங்கள் படைகளை அனுப்பியுள்ளோம்! இவ்வளவு தானே ஒழிய வேறல்ல", என்று அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் அறிக்கை விடுத்துளளார். யார் செய்தது சரிஎன்பதல்ல, பிரச்னை. இப்படி இன்னொரு நாட்டுவிவகாரத்தில் தலையிடுவது, தவறு என்று உலகம் கருதுகிறது. இனித் தவனுக்கு உதவியளிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு இருவருமா பலப்பரிட்சை பார்க்க வேண்டும்? கொள்கைகள் மக்கள் மனதில் பரவ வேண்டுமே ஒழிய, பீரங்கியாலா ஒரு கொள்கைக்கு மகத்துவம் தேட முடியும்? ஆதிக்கம ஒழிய வேண்டும் என்று சொல்லும் ருசியாவுக்குத்தான — அமெரிக்கா எவ்வளவு சொன்னாலும் —அனுதாபம் போகும். இதை அறிந்துகொள்ள வேண்டும், வல்லரசுகள்.

★

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... { அலுவலகம்..15 இல்லம்....111

# எல்லோருக்கும் எல்லாம்!

ஒரு கேள்வி, எழுப்பப் படுகிறது அடிக்கடி.

தனிப்பட்டோரிடமிருந்து, ஆலைகளையும், வியாபாரச் சாலைகளையும் எப்படி ஒரு சர்க்கார் ஏற்று நடத்த முடியும், என்பதுதான அக் கேள்வி.

டாடாவும் பிர்லாவும் செய்யும் தொழில்களை சர்க்காரே எப்படி ஏற்று நடத்த முடியும்?—என்கிருர்கள்.

'ஆம்! ஆம்!! அது; சிக்கலானதுதான. அவர்கள் எவ்வளவு திறமையாக நிர்வாகம் செய்கிருர்களோ, அதுபோல, அரசால் செய்ய இயலாதுதான்," என்று ஒருசில பொருளாதார நிபுணர்களும் தலையசைக்கிருர்கள்.

அரசு ஏற்று நடத்தும் சர்க்கார் பஸ் சர்வீசின் இலட்சணத்தைப் பார்க்கிறீர்களன்றே!-என்று, மிக, எளிதில் கேலியை வீசியெறிந்து இந்தக் கொள்கையே தீதானது, தேசிய மயமாக்கும் முறையே கூடாது, என்று சமய சஞ்சீவிகள் முரசம் தட்ட ஆரம்பித்துவிடுகிருர்கள்.

ஒருபோது, தொழில்களையெல்லாம் தேசிய உடமையாக்க வேண்டும் என்று பறை சாற்றிய நேரு சர்க்காருக்குக் கூடத் தம்மால், டாடா பிர்லா போன்ற முதலாளிகளைப்போலத் தொழில்களை நடத்த முடியுமா என்கிற சந்தேகம் அரும்பிப், பூவாகிக் காயாகி, இப்போதுகனியாகவே ஆகிவிட்டது!

அதனுல் பற்பல தொழில்களைத் துவக்குமபடி ஆலையரசர்களைக் கெஞ்சுகிருர்கள்.

அப்படித் துவக்கப்படும் தொழில்துறைகளை நாங்கள் எடுத்துக் கொள்ளமாட்டோம், என்று உறுதி மொழிகளும் அளிக்கிருர்கள்.

நேருமட்டுமல்ல, நேற்று முளைதத கேரள கம்யூனிஸ்டு அரசுகூடக் காற்றுப் போகும திக்கில போவோம் என்று பிர்லாவுக்கு 'வெற்றிலை பாக்கு' வைத்தழைத்து, கேரளத்தில், தொழில்களைத்துவக்கும்படி, கேட்கிறது. தீது செய்யோம் என்று உறுதிகளைத் தருகிறது எனில் விந்தைதானே!!

தேசிய உடைமையாக்குவது எனும் தத்துவமே, கூடாதது என்று குப்பைத் தொட்டியில் எடுத்தெறியப்பட்டு விடுமோ என்கிற சூழ்நிலை மலர்ந்து வரும் இச் சமயதில், ஒரு ஒளிச்சிதர் கிடைக்கிறது—செஞ்சீனவிலிருந்து!!

வட சீனவிலுள்ள பெரிய வியாபாரநகரம, டீண்ட்சின் என்பதாகும். அங்குள்ள 37,000 தனிபபட்ட வியாபாரிகளையும், சீர் திருத்தி, தேசிய உடைமையாக்கியிருக்கிறது, சீன அரசு.

தொழில் கேந்திரங்களைமட்டுமல்ல, கடைகளையும் கூட, ஒரு அரசு ஏற்று நடத்த முடியும்—திறமையும், 'சக்தியுமிருந்தால், என்று சீன அரசு நிரூபித்திருக்கிறது.

ஒருவரல்ல, இருவரல்ல, 37,000 பேர்! அத்தனை பேரும், தனித் தனியாகக் கடைவைத்து வியாபாரம் செய்தவர்கள்!!

அவர்தம் கடைகள் யாவும் தேசிய மயமாக்கப்பட்டுவிட்டன. சர்க்காரின் வசம், கொண்டுவரப் பட்டு விட்டன.

இதனுல்என்ன இலாபம்?-என்னலாம. போட்டி குறையும்-கொள்ளை இலாபம ஒழியும-ஒரேசீராக தமக்கு வேண்டிய பொருளகளைப் பெற இயலும்!!

"அதுசரி, இப்படிக்கடைக்காரர்களின தொழிலைப பறித்துவிட்டால், அவர்கள் எங்கேபோவது? பிச்சை எடுக்கவிடுவதா! அல்லது பிடித்துக்கொண்டு போய் கடலில் தளளுவதா! இல்லை, கழனிகளில் தூரதத கஷ்டப்படுமபடி செய்வதா!" என்று கேட்கத் தோன்றும்.

ஆலைகள்—வியாபார நிலையங்கள்—பெரிய பண்ணைகள் முதலியவைகளை ஒழித்தால், அவைகளை இதுகாறும் அனுபவித்தவர்கள் பழிக்குப்பழி வாங்கப்படுவார்கள் எனறே பொதுவாக அனைவரும் கருதுகின்றனர்.

அது மிகமிகத்தவறு என்பதை சீன காட்டியிருக்கிறது.

ஒரே ஒரு வாரத்தில், 37000 கடைகளையும், சர்க்கார் கைப் பற்றியது.

அவர்களுக்கெல்லாம் சர்க்காரின் கடைகளில் முன்புபோல, வேலைகள் தரப்பட்டன; கூட்டுறவு இயக்கங்களில் அமர்த்தப்பட்டனர்; பாக்டரிகளுக்குப் பலர் அழைத்தேகப்பட்டனர்; சாதாரண கணக்கப்பிள்ளைகளைப்போலவும், சின்னஞ்சிறு கடைகளை வைத்துக்கொண்டு இருந்தோருக்கும் அவரவர் தரத்துக்கும் விருப்பத்துக்கும் தக்கபடி, ஆங்காங்கு வேலைகள் தரப்பட்டுள்ளன.

முன்பு இருந்தவர்கள்தான் இப்போதும் கடைகளிலிருப்பார்கள்! முன்பு கடை, அவர்களுடையது, இப்போது சர்க்காருடையது, முன்புதான்மட்டும், இலாபத்தைப் பெற்றுச் சென்று சுகமாத வாழலாம்; இப்போது அது இயலாது.

சமதர்மம், இதுதான்! இது முளைக்க, திடமான உள்ளமும் செயல் வன்மையும் சீன அரசிடம் உள்ளது.

கடந்த ஜூலை 8-ல்,தான், இந்தச் சீர்திருத்தம, செய்யப்பட்டிருக்கிறது, டீண்ட்சினில்.

இதுபோல, இங்கும் செய்யலாம — அதற்கு வேண்டிய உள்ளத் தூய்மை ஏது, காங்கிரஸ் ஆளவந்தார்களிடம்! இவர்களிலேயே பலர், ஆலைகளை நடாத்தவும், கடைகளை நடத்தவும், 'பெர்மிட்' பெறவும்தானே இன்றைய தினம் காங்கிரசுக்குள் புகுந்து கொண்டிருக்கிருர்கள்!

★

காஞ்சிபுரம், ௭௫, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.